பக்கங்கள்: 12

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 06 வள்ளுவர் ஆண்டு 2053 புரட்டாதி 06 வெள்ளிக்கிழமை 23.09.2022 கதிர் 320

**இ னி து ரகசியம் அல்ல!**

குருக்கள் ஏதோ செய்தால் குற்றமில்லை என்பார்கள். அது மாதிரி டெங்கு நுளம்பு பரவல் தடுப்பு விடயத்தில் சுகாதார வைத்திய அதிகாரி நடந்து கொள்கின்றாரா என ஒரு நண்பர் கேள்வி எழுப்புகின்றார்.

யாழ்ப்பாணம்

2

# பயங்கரவாதத் தடைச் சட்டத்துக்கு எதிராக காலிமுகத்திடலிலும் கையெழுத்து வேட்டை





மூவினத்தவர்களும் அணிதிரண்டு பங்கேற்பு


பயங்கரவாதத் தடைச் சட்டத்துக்கு எதிராகக் கையெழுத்துத் திரட்டும் போராட்டம் நேற்று கொழும்பு - காலிமுகத்திடலில் முன்னெடுக்கப்பட்டது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளர் ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ. சுமந்திரன் உள்ளிட்ட எதிரணி நாடாளுமன்ற உறுப்பினர்கள், இலங்கை ஆசிரியர் சங்கத்தின் பொதுச்செயலாளர் ஜோசப் ஸ்டாலின் உள்ளிட்ட தொழிற்சங்கங்கள் மற்றும் வெகுஜன அமைப்புக்களின் பிரதிநிதிகள், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்கள், மதகுருமார்கள்

2

# குருந்தூர்மலை, திருக்கோணேஸ்வரம் ஆக்கிரமிப்புக்களை உடனே நிறுத்துக!

## நாடாளுமன்றில் சுமந்திரன் இடித்துரைப்பு; தொல்லியல் திணைக்களம் மீதும் பாய்ச்சல்



**குருந்தூர்மலையில் நீதிமன்றக் கட்டளையை மீறியவர்களுக்கு எதிராக ஆர்ப்பாட்டம் செய்து நீதியைக் காக்க முற்பட்டவர்களே கைது செய்யப்பட்டார்கள் என்று தெரிவித்த தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளரும் யாழ்ப்பாணம் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான எம்.ஏ. சுமந்திரன், தொல்லியல் திணைக்களம் மிக மோசமான இனவாத திணைக்களமாகத் தமிழ் மக்களுக்கு எதிராகத் தொடர்ச்சியாகச் செயற்பட்டுக்கொண்டிருக்கின்றது என்றும் குற்றம் சாட்டினார்.**

2

# மொட்டை தலையுடன் நீதி கோரி ஜெனிவா சென்ற சிங்கப் பெண்

## குற்றச் செயல்களுக்குத் தண்டனை வழங்காத நாடே இலங்கை என்று கடுமையாகச் சாடினார்



காணாமல்போன கணவருக்காகச் சளைக்காமல் போராடியதற்காக சர்வதேச விருது வழங்கி கௌரவிக்கப்பட்ட மனித உரிமை செயற்பாட்டாளர் சந்தியா எக்னெலிகொட, இலங்கை குற்றச் செயல்களுக்குத்

2

# அமைச்சரவைக்குத் தெரியப்படுத்தியே நாணய நிதியத்துடன் உடன்படிக்கை!

சர்வதேச நாணய நிதியத்துடன் உடன்படிக்கைக்கு வருவதற்கு முன்னர் அந்த உடன்படிக்கை தொடர்பில் அமைச்சரவைக்கு தெரிவிக்கப்படும் என ஜனாதிபதி தமக்கு அறிவித்ததாக சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன நேற்று நாடாளுமன்றத்தில் தெரிவித்தார்.

ஊழியர் மட்ட உடன்பாடு எட்டப்பட்டுள்ளதாகவும் அதற்கு சர்வதேச நாணய நிதியத்தின் நிறைவேற்று சபையினால் அங்கீகாரம் வழங்கப்பட வேண்டும் எனவும் அதற்கு முன்னர்

2

# ‘வவுனியாவ’ ஆக மாறிய ‘வவுனியா’

## வடக்கு பிரதமர் செயலருக்கு சி.வி.கே. கடிதம்

வவுனியா நகர சபை, மாநகர சபையாக தரமுயர்த்தப்பட்டுள்ள நிலையில் அது தொடர்பாக வெளியிடப்பட்ட வர்த்தமானி அறிவித்தலில் வவுனியா என்னும் பெயர் ‘வவுனியாவ’ என்று மாற்றப்பட்டுள்ளது.

இது தொடர்பாகக் கவனம் செலுத்த வேண்டும் என்றும், உரிய திருத்தத்தை மேற்கொள்ள வேண்டும் என்றும் வடக்கு மாகாண அவைத் தலைவர் சி.வி.கே.சிவஞானம், வடக்கு மாகாண பிரதம செயலாளருக்குக் கடிதம் ஒன்றை அனுப்பியுள்ளார்.

இது தொடர்பில் அவர் எழுதியுள்ள கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

இந்த விடயம் தொடர்பாக பிரதமர் மற்றும் பொது நிர்வாக உள்நாட்டலுவர்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சரால் வெளியிடப்பட்ட

2

# 2 பிள்ளைகளின் தாய் படுகொலை

அத்தனகல்லை - ஹெலபனாகந்த பகுதியில் இரண்டு பிள்ளைகளின் தாய் (வயது 37) படுகொலை செய்யப்பட்டுள்ளார்.

ஆடைத்தொழிற்சாலைக்குத் தொழிலுக்குச் சென்ற குறித்த பெண், நேற்றுமுன்தினம் மாலை வீடு திரும்பிய போது தாக்கப்பட்டு வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டிருந்த நிலையில் நேற்றுக்

2





# தமிழரின் நில ஆக்கிரமிப்புக்கு எதிராக யாழ். பல்கலை மாணவர்கள் போராட்டம்

(இ.கலையமுதன்)

குருந்தூர்மலைப் பகுதியில் முன்னெடுக்கப்பட்ட ஆர்ப்பாட்டம் தொடர்பாக இருவர் கைது செய்யப்பட்டமைக்கு நீதி கோரியும் பௌத்தமயமாக்கலுக்கு எதிர்ப்புத் தெரிவித்தும் யாழ்ப்பாணம் பல்கலைக்கழக மாணவர்களால் நேற்று ஆர்ப்பாட்டப் பேரணி முன்னெடுக்கப்பட்டது.

யாழ். பல்கலைக்கழக பிரதான நுழைவாயிலுக்கு முன்பாக நேற்று நண்பகல் 12 மணியளவில்

2

காலைக்கதிர் Kalaikkathir

## இனி இது .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஆரியகுளம் புனரமைப்பின் பின்னர் குளத்தை அண்டிய பகுதியில் பழைய டயர்கள் குவிக்கப்பட்டுள்ளன எனவும், அந்தடயர்களில்தேங்கிநிற்கும்தண்ணீரில் டெங்கு பரப்பும் நுளம்பின் லாவாக்கள் காணப்படுகின்றன எனவும் யாழ். மாநகர சபை சுகாதார வைத்திய அதிகாரி, யாழ் மாநகர சபை ஆணையாளருக்குக் கடிதம் மூலம் அறிவித்துள்ளார்.

அந்த அயல் பிரதேசத்தில் டெங்கு நோயாளர்கள் அடையாளம் காணப்பட்ட பின்புலத்திலேயே இந்தக் கடிதம் அனுப்பப்பட்டிருக்கின்றது.

இந்த லாவாக்கள் தனியார் ஒருவர் வீட்டில் ஒரு சிரட்டை தண்ணீரில் காணப்பட்டால் போதும். அவர் நீதிமன்றத்தில் நாள்கணக்கில் தொங்க வேண்டி இருக்கும்.

யாழ் மாநகர சபைக்கு அத்தகைய நடவடிக்கை ஏதுமில்லை. வெறும் அறிக்கையிடல் அல்லது 'அன்பு' மடல் மட்டும் தான்.

ஏனென்றால் யாழ் மாநகர சுகாதார வைத்திய அதிகாரியும் யாழ் மாநகர சபைக்குகள் வரும் பணியாளர்தான்.

அதுதான் குருக்கள் ஏதும் செய்தால் குற்றமில்லை என்றார் அந்த அன்பர்.

யாழ் மாநகர சபை எல்லைக்குள் உள்ள பாடசாலைகளில் டெங்கு நுளம்பு லாவாக்கள் காணப்பட்டால் பாடசாலை அதிபர்களையே நீதிமன்றங்களுக்கு இழுக்கும் சுகாதார வைத்திய அதிகாரிகளுக்கு மாநகர சபை ஆணையாளர் மீது மட்டும் பட்சம் அதிகம் போலும். அதனால் வெறும் அறிக்கையிடலுடன் நடவடிக்கை முடிவுக்கு வந்து விட்டது.

***

நேற்று காலி முகத்திடலில் பயங்கரவாதத் தடைச் சட்டத்திற்கு எதிராகக் கையெழுத்துப் போராட்டம் நடைபெற இருந்த சமயத்தில் இந்தப் போராட்டத்தின் ஊர்தியை அந்த இடத்திலிருந்து பொலிஸார் மடக்கிக் கொண்டு போன போது, அந்த நேரத்தில் அங்கு வந்து சேர்ந்த சுமந்திரன் குழு, சினிமாப் படப்பாணியில் அதைத் துரத்திச் சென்று தமது வாகனத்தைக் குறுக்கே விட்டு கடத்தல் முயற்சியை வழிமறித்தது. அங்கு சுமந்திரனின் தலைக் கறுப்பைக் கண்டதும் ஊர்தியை மடக்கிக் கூட்டிச் சென்று கொண்டிருந்த ஏ.எஸ்.பி. தர பொலிஸ் அதிகாரி தனது வாகனத்தில் மெல்ல நழுவினார். கீழ்நிலை அதிகாரிகள்தான் சுமந்திரன் அணியிடம் சிக்கினர்.

"எல்லோரையும் நீதி கேட்டு நீதிமன்றத்துக்கு இழுப்போம்" என்றதும், வாகனத்தைச் சட்டவிரோதமாக மடக்கிச் செல்லும் தமது முயற்சியைக் கைவிட்டு பொலிஸ் அணி ஜாகா வாங்கியது.

அதன் பின்னர் திட்டமிட்டபடி காலி முகத்திடலில், குறிப்பிட்ட இடத்தில், நிகழ்வு இடம் பெற்றது. எனினும் பல நூற்றுக் கணக்கில் குவிக்கப்பட்டிருந்த பொலிஸார் தமது 'இடைஞ்சல்' பணியைக் கண்ணும் கருத்துமாக முன்னெடுத்தனர்.

மேற்படி சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்ட அறகலய போராட்டக்காரர்களின் பல்கலை மாணவ இணைப்பாளர்கள் மூவரும் இன்று ஹல்ஸ்ட்ரோப் நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தப்பட இருக்கின்றனர். அந்த வழக்கின் பின்னர் இன்று நண்பகல் நீதிமன்றச் சுற்றாடலில் சட்டத்தரணிகள் மத்தியில் இந்தக் கையெழுத்துச் சேகரிக்கும் நிகழ்வு இடம் பெற உள்ளது.

சட்டத்துக்கு சவால் விடும் போராட்டம், வழமையாகச் சட்டம் சவாலுக்கு உள்ளாகும் இடத்துக்கு இன்று வருகின்றது. பொருத்தமானதுதான்...!

- மின்னல் -

## குருந்தூர்மலை, ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நாடாளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற இலங்கை தொலைக்காட்சி கூட்டுத்தாபன திருத்தச் சட்டமூல விவாதத்தில் உரையாற்றுகையிலேயே இவ்வாறு குற்றம் சாட்டிய அவர் மேலும் பேசுகையில்,

குருந்தூர்மலையில் புதன்கிழமை எங்களுடைய கட்சி உறுப்பினர்கள் கைது செய்யப்பட்டுள்ளார்கள். தொல்லியல் திணைக்களம் சட்டவிரோதமாக அங்கு கட்டடங்களைக் கட்டுவதை எதிர்த்து ஆர்ப்பாட்டம் செய்தவர்கள் கைது செய்யப்பட்டுள்ளார்கள்.

தொல்லியல்திணைக்களம்இப்படியாக எங்களுடைய மக்களின் நிலங்களை மிக மோசமான முறையிலே அபகரிக்கின்ற திட்டங்கள் சம்பந்தமாக பலதடவைகளிலே நாங்கள் இந்த நாடாளுமன்றத்திலும் வெளியிலும் பேசியிருக்கின்றோம்.

600 க்கும் மேற்பட்ட ஏக்கர் வயல் காணிகளை அபகரிக்கின்ற இந்த முயற்சி தடுக்கப்பட வேண்டும் என்று அவர்கள் செய்த ஆர்ப்பாட்டத்துக்குப் பிரதிபலனாக அவர்கள் கைது செய்யப்படுகின்றார்கள். இதுஉடனடியாக நிறுத்தப்பட வேண்டும்.

ஜனாதிபதியோடு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நடத்திய சந்திப்பில் இது குறித்து பேசினோம். பணிப்பாளர் நாயகத்துக்குத் தான் உடனடியாக அறிவிப்பதாக உறுதியளித்திருந்தார். ஆனாலும், இந்தத் தொல்லியல் திணைக்களம் மிக மோசமான இனவாத திணைக்களமாக, தமிழ் மக்களுக்கு எதிராகத் தொடர்ச்சியாகச் செயற்பட்டுக்கொண்டிருக்கின்றது. இது உடனடியாக நிறுத்தப்பட வேண்டும்.

இதே போன்று கிழக்கிலே திருக்கோணேஸ்வரம் ஆலயத்தை அபகரிக்க இப்போதுஒருதிட்டம்முன்வைக்கப்பட்டுள்ளது.

திருக்கோணேஸ்வரம்இலங்கையிலே இருக்கின்ற 5 ஈஸ்வரங்களில் ஒன்று. இது மிகப் பழமை வாய்ந்தது. இந்த நாட்டுக்கு விஜயன் வருவதற்கு முன்னதாகவே 5 ஈஸ்வரங்கள் இலங்கையில் இருந்தன என்று வரலாற்று ஆசிரியர் சேர் போல் பீரிஸ் எழுதியுள்ளார்.

தற்போது அரசிலுள்ள இரத்தினபுரியைச் சேர்ந்த ஒருவரே அங்கு வந்து மாவட்டக்காரர்களை அழைத்துச் சென்று ஆக்கிரமிப்புக்களில் ஈடுபடுகின்றார்.

திருக்கோணேஸ்வரர் ஆலயத்தை அண்டியுள்ள இடங்களில் 58 கடைகளை வேறு மாவட்டங்களைச் சேர்ந்த பெரும்பான்மையினத்தவர்களே நடத்தி வருகின்றனர். இந்த ஆக்கிரமிப்புக்களும் உடனடியாக நிறுத்தப்பட வேண்டும் - என்றார்.

## பயங்கரவாதத் தடைச் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மற்றும் மூவின மக்கள் எனப் பலரும் இதில் பங்கேற்றனர்.

பயங்கரவாதத் தடைச் சட்டத்தை முற்றாக நீக்குமாறு வலியுறுத்தி இலங்கைத் தமிழரசுக் கட்சியின் வாலிபர் முன்னணி, சர்வஜன நீதி அமைப்பு, தொழிற்சங்கங்கள் மற்றும் வெகுஜன அமைப்புக்களின் கூட்டமைப்பு ஆகியவற்றின் ஏற்பாட்டில் நாடளாவிய ரீதியில் ஊர்தி வழிப் போராட்டமாகச் சென்று கையெழுத்துத் திரட்டும் நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டு வருகின்றது என்பது குறிப்பிடத்தக்கது.

## அமைச்சரவைக்குத் .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கடனாளர்களுடனான கலந்துரையாடலில் அறிக்கை உள்ளடக்கப்பட வேண்டுமெனவும் ஜனாதிபதி தெரிவித்துள்ளார்.

எல்லா தகவல்களும் கிடைத்த பிறகு அமைச்சரவை விளக்கம் அளிக்கப்படும். மேலும், எதிர்க்கட்சிகள் மற்றும் ஆர்வமுள்ள கட்சிகள் மாநாட்டில் பங்கேற்கலாம் என்று ஜனாதிபதி தன்னிடம் கூறினார் எனவும் சபாநாயகர் தெரிவித்தார்.

## மொட்டை தலையுடன் .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தண்டனை வழங்காத நாடு என்று சர்வதேச சமூகத்துக்குத் தெரிவித்துள்ளார்.

12 வருடங்களுக்கும் மேலாக நீதிக்காகப் போராடி வரும் சந்தியா எக்னெலிகொட, ஜெனிவாவில் ஐக்கிய நாடுகள் சபையின் உயர்மட்ட அமர்வில் உரையாற்றும்போதே சிங்கள மொழியில் இதனைக் கூறியுள்ளார்.

இதன்போது அவர் மேலும் தெரிவிக்கையில்,

இன்று நீங்கள் காணும் எனது மொட்டையடிக்கப்பட்ட தலை மற்றும் கறுப்பு ஆடைகள், நான் குற்றவியல் சக்திகளுக்குத் தண்டனை கிடைக்காத, பாதிக்கப்பட்டவருக்கு நீதி கிடைக்காத நாட்டிலிருந்து வந்துள்ளேன் என்ற செய்தியை உங்களுக்கு வழங்குகின்றது.

வலுக்கட்டாயமாக காணாமல் ஆக்கப்பட்ட எனது கணவர் ஊடகவியலாளர் பிரகீத் எக்னெலிகொடவுக்கு நீதி கிடைக்க ஒவ்வொரு நாளும் புதிய மற்றும் முடிவில்லாத போரில் ஈடுபட வேண்டியுள்ளது.

என்னைப் போன்று காணாமல்போன தமது உறவுகளைத் தேடி வரும் சிங்கள, தமிழ், முஸ்லிம் தாய்மார்கள் நாடு பூராகவும் உள்ளனர்.

வடக்கில்தமிழ்தாய்மார்கள்தொடர்ந்து போராடி வருகின்றனர். என்னைப் போலவே, அவர்களும் பொலிஸ் போன்ற பல அரசு நிறுவனங்களுடன் மோதுகின்றார்கள்.

கடந்த நான்கு தசாப்தங்களில் பல ஆணைக்குழுக்கள் நியமிக்கப்பட்ட போதிலும், எந்தவொரு ஆணைக்குழுவும் காணாமல்போனவர்களுக்கோ அல்லது அவர்களது குடும்பங்களுக்கோ நீதி வழங்கவில்லை - என்றார்.

இரண்டு பிள்ளைகளின் தாயான சந்தியா எக்னெலிகொட, பாதிக்கப்பட்டவர்கள் உண்மையையும் நீதியையும் அடைய நம்பக்கூடிய ஒரு சட்டப் பொறிமுறையைப் பெறுவதற்கு ஐ.நா. தலையிட வேண்டும் என்று கேட்டுக்கொண்டார்.

ஊடகவியலாளர் பிரகீத் எக்னெலிகொட 2010ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 24ஆம் திகதி பலவந்தமாகக் காணாமல் ஆக்கப்பட்டார்.

2017ஆம் ஆண்டில், இலங்கையில் நடந்த போரிலும் முந்தைய கிளர்ச்சிகளிலும் காணாமல்போன ஆயிரக்கணக்கான மக்களின் உறவினர்களின் அடையாளமாக மாறிய ஒரு பெண்ணாக சந்தியா எக்னெலிகொடவுக்கு அமெரிக்காவின் சர்வதேச தைரியத்துக்கான விருதை அளித்தது.

காணாமல்போன தமது கணவர் பிரகீத் எக்னெலிகொட குறித்த உண்மையை வெளிக்கொண்டுவர, அதிகாரிகளின் தடைகளையும் மீறி 80 தடவைகளுக்கு மேல் நீதிமன்றம் சென்று சந்தியா காட்டிய தைரியமே அவருக்கு இந்த விருது கிடைத்தமைக்குக் காரணம் என அமெரிக்காவின் உதவி இராஜாங்கச் செயலாளர் தோமஸ் ஏ ஷெனொன் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

## 2 பிள்ளைகளின் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

காலை உயிரிழந்துள்ளார்.

குறித்த பெண்ணைப் பின் தொடர்ந்து சென்ற நபரே தாக்குதல் மேற்கொண்டுள்ளார்.

நீதிவான் விசாரணைகள் நேற்று இடம்பெற்றன.

இந்தக் கொலை தொடர்பில் 45 வயதான நபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

## 'வவுனியாவ' ஆக ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

06/09/2022ஆம் திகதி 2296/05 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தலுக்குத் தங்கள் அவதானம் கோரப்படுகின்றது.

இந்த வர்த்தமானியில் 'வவுனியா நகர சபை, வவுனியா மாநகர சபை' ஆகத் தாபிப்பது என தமிழில் இருக்கும் நிலையில், ஆங்கிலத்தில் 'வவுனியாவ உர்பன் கவுன்ஸில்' என்றும் வவுனியாவ முனிசிப்பல் கவுன்சில்' என்றும் உள்ளது.

வரலாற்று ரீதியாக இந்த உள்ளூராட்சி சபையின் பெயர் தமிழில் 'வவுனியா' என்றும், ஆங்கிலத்தில் 'வவுனியா' என்றும் அறியப்பட்டும், பதியப்பட்டும் வந்துள்ளது. ஆங்கிலத்தில் 'வவுனியாவ' என்று பிரசுரிப்பது தவறானதும், வரலாற்றுப் பிறழ்வானதுமாகும்.

'வவுனியா' என்ற தமிழ் பிரதேசத்தின் வரலாற்றுப் பெயரை 'வவுனியாவ' என ஆங்கிலத்தில் அறியப்படுத்துவதோ, பதியப்படுவதோ தவறானது என்பதைப் பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் கவனத்துக்குக் கொண்டு வந்து, 'வவுனியா' என ஆங்கிலத்தில் உரிய திருத்தத்தை மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கக் கோரும்படி கேட்டுக்கொள்கின்றேன் - என்றுள்ளது.

## தமிழரின் நில ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஒன்றுகூடிய பல்கலைக்கழக மாணவர்கள் அங்கிருந்து கோஷங்களை எழுப்பியவாறு பேரணியாக இராமநாதன் வீதி ஊடாக பரமேஸ்வராச் சந்தியை அடைந்து அங்கிருந்து சிறிது நேரம் வீதியை முடக்கி போராட்டத்தில் ஈடுபட்டதுடன் பின்னர் பேரணியாகப் பல்கலைக்கழகத்தை வந்தடைந்தனர்.

முல்லைத்தீவு - தண்ணிமுறிப்பு, குருந்தூர்மலையைச் சூழவுள்ள தமிழ் மக்களுக்குரிய 632 ஏக்கர் பூர்வீகக் காணிகளை தொல்லியல் திணைக்களம் அபகரிக்க முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றமை மற்றும் நீதிமன்ற கட்டளையைப் புறந்தள்ளி பௌத்த கட்டுமானம் மேற்கொள்ளப்படுகின்றமை என்பவற்றைக் கண்டித்து நேற்றுமுன்தினம் குருந்தூர்மலையில் அப்பகுதி மக்கள், அரசியல் கட்சி பிரதிநிதிகள், சிவில் சமூகப் பிரதிநிதிகள், பல்கலைக்கழக மாணவர்கள் பங்கேற்புடன் ஆர்ப்பாட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டது.

இந்த ஆர்ப்பாட்டத்தில் கலந்துகொண்ட முன்னாள் வடக்கு மாகாண சபை உறுப்பினர் து.ரவிகரன், சமூக செயற்பாட்டாளர் இ.மயூரன் ஆகியோர் முல்லைத்தீவுப் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டிருந்தனர். இதனைக் கண்டித்தும், பௌத்தமயமாக்கலுக்கு எதிர்ப்புத் தெரிவித்துமே யாழ். பல்கலைக்கழக மாணவர்கள் நேற்றுப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

விளம்பரத் தொடர்புகளுக்கு -
தொலைபேசி
இலக்கம் -
076 443 8622
kalaikkathiradvt@gmail.com



# இங்கிலாந்திலேயே அன்ரன் பாலசிங்கம் போஷிக்கப்பட்டு வளர்க்கப்பட்டுள்ளார்!

## விமல் வீரவன்ஸ கூறுகின்றார்

நாட்டில் அடுத்து ஏற்படும் போராட்டம் பட்டினியால் பாதிக்கப்பட்ட மக்கள் நடத்தும் போராட்டமாக இருக்கும் எனவும் அப்படியான அழிவின் ஊடாக நாட்டில் இருளான நிலைமைக்கு செல்வதை தவிர்க்கக் கூடிய அனைத்து நடவடிக்கைகளும் எடுக்கப்பட வேண்டும் எனவும் நாடாளுமன்ற உறுப்பினர் விமல் வீரவன்ஸ தெரிவித்துள்ளார்.

தேசிய சபை தொடர்பான நாடாளுமன்ற விவாதத்தில் கலந்துக்கொண்டு உரையாற்றும் போதே அவர் இதனைக் கூறியுள்ளார்.

மக்களின் பட்டினி தொடர்பான பிரச்சினையை தீர்க்க உரிய அறிவியல் ரீதியான திட்டங்கள் இருக்க வேண்டும். பட்டினியைப் போக்கும் அரசாங்கத்தின் வேலைத்திட்டம் தொடர்பாக அறிய மக்களுக்கு உரிமையுள்ளது.

அன்றாடம் சமாளிக்கும் வேலைத்திட்டங்களால் மக்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வுகாண முடியாது.

நாட்டின் பொருளாதாரப் பிரச்சினைகளைத் தீர்ப்பதை விட பக்கிங்ஹாம் அரண்மனைக்கு சென்று மகாராணியின் இறுதிச்சடங்கில் கலந்துக்கொள்வது ஜனாதிபதிக்கு முக்கியமானதாக இருக்கின்றது. அவற்றுக்கு டொலர் இருக்கின்றது. ஏழு, எட்டு பேர் இங்கிலாந்து சென்றுள்ளனர்.

நான் அறிந்த வரையில் அயல் நாடான இந்தியாவில் இருந்து இந்திய ஜனாதிபதியின் பிரதிநிதியே அனுப்பி வைக்கப்பட்டுள்ளார்.

இலங்கையில் இருந்து நாட்டின் தலைவரே சென்றுள்ளார். சென்றது தொடர்பாக எனக்கு எந்த பிரச்சினையுமில்லை. ஜனாதிபதி செயலகத்துக்கு எதிரில் பிரித்தானிய கொடியும் அரைக்கம்பத்தில் பறக்கவிடப்பட்டுள்ளது.

இதன் மூலம் வீரபுரங்கப்பு கொல்லப்பட்டது சிறந்தது என்று கூறுகின்றோம். வெல்லஸ்ஸவில் எமது முன்னோர்களை கொன்றது நல்லது என்று நாங்கள் கூறுவதாக அமையும்.



எமது பிக்குமார் கொலை செய்யப்பட்டது நல்லது என்று நாம் கூறுவதாக அமையும். அரச நிர்வாக அமைச்சு வெளியிட்டுள்ள அறிக்கையில் 1952 ஆம் ஆண்டு முதல் 1972 ஆம் ஆண்டு வரை இலங்கையை ஆட்சி செய்த ராணி என எழுதப்பட்டுள்ளது.

இப்படியான மனநிலையில் நாட்டில் ஏற்பட்டுள்ள பொருளாதாரப் பிரச்சினைக்கு எப்படி தீர்வு காண்பது. இங்கிலாந்திலேயே அன்ரன் பாலசிங்கம் போஷிக்கப்பட்டு வளர்க்கப்பட்டார்.

அவர்களே ஜெனிவாவில் எமது படையினருக்கு எதிராக யோசனையைக் கொண்டு வருகின்றனர். அவர்களே எமது வரலாற்று சிறப்புமிக்க அறிவு களஞ்சியமான ஓலைச்சுவடிகளைக் கொள்ளையிட்டனர்.

அவர்களே மலைநாட்டில் காடுகளை அழித்து எடுத்துச் சென்றனர். அந்த வரலாறு தெரியாத, அந்த உணர்வு இல்லாதவர்கள் நாட்டை ஆட்சி செய்கின்றனர் என்றால் அப்படியானவர்களால் நாட்டை பொருளாதார வீழ்ச்சியில் இருந்து மீட்டெடுக்க முடியும் என்று எங்களால் நம்ப முடியாது எனவும் விமல் வீரவன்ஸ மேலும் தெரிவித்துள்ளார்.



# திருட்டு அரசியல்வாதிகளை காப்பாற்ற முனையும் நாமல்!

பல்வேறு குற்றஞ்சாட்டுகளில் சிக்கியுள்ள ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ மற்றும் ரோஹித அபேகுணவர்தன ஆகியோரின் பெயர்கள் புதிய அமைச்சரவையில் முன்வைக்கப்பட்டுள்ளன.

இருந்த போதிலும், அவர்கள் தொடர்பில் எழுந்த எதிர்ப்புக்களை கருத்திற் கொண்டு ஜனாதிபதி அவர்களுக்குப் பதவி வழங்குவதற்குத் தயக்கம் காட்டியுள்ளார்.

எனினும், அவர்களுக்கு பதவி வழங்கப்பட வேண்டும் என நாமல் ராஜபக்ஷ தனிப்பட்ட முறையில் பல அழுத்தங்களைப் பிரயோகித்து வருகிறார்.

இது தொடர்பில் அரசாங்கத்திற்குள்ளேயே அதிருப்தி வெளியிடப்பட்டுள்ளதாக உள்ளக தகவல் வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

எதிர்கால எதிர்பார்ப்புடன் நாமல் ராஜபக்ஷவை இம்முறை அமைச்சரவைக்கு வராமல் தவிர்க்கப்பட்டுள்ளது. எனினும் குறித்த இரண்டு பேருக்கு எதிராக பொதுஜன பெரமுனவில் எதிர்ப்புகள் உள்ள போதிலும் அவர்களுக்கு பதவி பெற்றுக் கொடுக்கும் தீவிர முயற்சியில் நாமல் ராஜபக்ஷ ஈடுபட்டுள்ளார்.



காலைக்கதிர் Kalaikkathir

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com

## நீதியும் நிர்வாகமும்

அரசியல், நிர்வாகத் தீர்மானங்கள் வேறு; சட்ட, நீதித்துறை நடவடிக்கைகள் வேறு. அவை ஒன்றோடு ஒன்று கலக்க முடியாதவை. கலக்கக் கூடாதவை. இரண்டும் வெவ்வேறு தடங்களில் பயணிக்க வேண்டியவை.

ஆயினும், சில தவிர்க்க முடியாத சமயங்களில் அவை ஒன்றுபட வேண்டிய தேவை – அவசியம் – ஏற்பட்டு விடுகின்றது. மிக அவதானமாகப் பிரித்தாய்ந்து, அத்தகைய விடயங்களைக் கையாள வேண்டி இருக்கும்.

சில மாதங்களுக்கு முன்னர் ரஷ்யாவின் ஏரோபுளொட் விமானம் ஒன்று கொழும்பில் தடுக்கப்பட்டது. அது முற்றும் முழுதாக நீதிமன்ற நடவடிக்கை. அந்தத் தடுப்பு உத்தரவுக்கும் அரசுக்கும் தொடர்பில்லை. இலங்கை அரசு அதைத் தலையிட்டு முன்னெடுக்கவில்லை.

ஆனால், ரஷ்யாவின் கடும் ஆட்சேபம் மற்றும் அதைத் தொடர்ந்த இலங்கை அரசின் தலையீடு ஆகியவை காரணமாக அந்தத் தடுப்பு உத்தரவு நீதிமன்றத்தினால் விலக்கப்பட்டு, விமானம் தனது பயணத்தைத் தொடர அனுமதிக்கப்பட்டது.

இப்படி விமானம் தடுக்கப்பட்ட சம்பவத்திற்காக இலங்கை அரசு ரஷ்யாவிடம் இப்போது மன்னிப்புக் கோரி இருக்கின்றது.

இலங்கை நீதிமன்றம் ஒன்றின் முடிவுக்காக அரசு ஏன் மன்னிப்புக் கோர வேண்டும்? இனிமேல் அப்படி நடக்காது என்று ரஷ்யாவுக்கு இலங்கை வாக்குறுதி கொடுத்திருக்கின்றது. அப்படியாயின் இத்தகைய உத்தரவு ஒன்றை இலங்கையின் எந்த நீதிமன்றமும் இனிமேல் கொடுக்காது என்று அரச நிர்வாகம் ஒரு வாக்குறுதி அளிக்கின்றது. அது எங்ஙனம் சாத்தியம்?

வெவ்வேறு தடத்தில் பயணிக்க வேண்டிய அரசு நிர்வாகமும் சட்ட, நீதித்துறை நிர்வாகமும் நாட்டின் நலன் கருதி தமது தனித்துவ பாதைகளை சற்று தள்ளி வைத்துவிட்டுக் கூட்டிணைந்து செயல்படுவதற்கான தவிர்க்க முடியாத தேவைப்பாடு – இணக்கப்பாடு – ஒன்று இங்கு உருவாகி இருப்பதையே இந்நிலைமை சுட்டுகின்றது.

“அது நீதிமன்றத்தின் உத்தரவு. அரசுக்கும் அதற்கும் தொடர்பில்லை .எமது கட்டுப்பாட்டில் அத்துறை இல்லை. அது சுயாதீனமான துறை” – என்று அந்த விமானத் தடுப்புத் தொடர்பில் இலங்கை அரசு கூறிவிட்டு, விலகி இருக்கவில்லை. நீதித்துறையுடன் சேர்ந்து ஏதோ ஒரு மட்டத்தில் இணக்கத்துக்கு வந்து, சர்வதேச விவகாரங்களைக் கையாள்வதில் சீரான ஒழுங்கு முறைமைக்கு ஒரு வழி செய்து இருக்கின்றது.

இதுதான் பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தை நடைமுறைப்படுத்துவதிலும் பின்பற்றப்பட வேண்டும் என்பதைச் சுட்டிக் காட்ட விழைகிறோம்.

“அறகலய போராட்டக்காரர்களை கையாளும் விடயத்தை நான் சட்ட, நீதித் துறையின் சுயாதீனச் செயற்பாட்டுக்கு விட்டுவிட்டேன். பொலிஸார் அந்தப் போராட்டக்காரர்களுக்கு எதிராக நாட்டில் இருக்கும் பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் சட்ட நடவடிக்கை எடுப்பதற்கு நான் என்ன செய்ய முடியும்?” – என்ற மாதிரி ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இப்போது வியாக்கியானம் கூற முயலுகின்றார்.

இலங்கை அரசுதான் பயங்கரவாத தடைத்தட்டத்தை நீக்குகிறோம், மாற்றி அமைக்கிறோம் என்று வாக்குறுதிகளை சர்வதேசத்திற்கு வழங்கியது. அதுவரையில் இந்தச் சட்டத்தை பயன்படுத்த மாட்டோம் என்று நாடாளுமன்றத்தில் உறுதி கூறியது. ஆகவே பொலிஸார் அந்தச் சட்டத்தை கையில் தூக்காமல் பார்த்துக் கொள்வது இந்த அரசினது கடமைதான். அதை அரசு செய்ய வேண்டும்.

அறகலயப் போராட்டத்தை ஒட்டிக் கைதான பல்கலைக் கழக மாணவ அமைப்பின் செயற்பாட்டாளர்கள் மூவரின் வழக்கு இன்று நீதிமன்றத்திற்கு வருகின்றது. பயங்கரவாதத் தடைச் சட்டத்தை பயன்படுத்துவதை ஒட்டி, இந்த வழக்கில் ரணிலின் அரசு பொலிஸாரை எப்படி வழி நடத்தப் போகின்றது என்பதை இன்று கண்டறிய முடியும்.

# பெண்களுக்கான சுகாதார திட்டங்களை நடைமுறைப்படுத்த இலங்கை அவதானம்

## சுகாதார அமைச்சர் கெஹலிய தகவல்



இலங்கையில் பெண்களுக்கான சுகாதார துவாய்களை தயாரிக்கும் திட்டத்தை ஆரம்பிப்பது தொடர்பில் இந்திய தொழில்முனைவரான அருணாசலம் முருகநாதனுடன் கலந்துரையாடல் தொடர்கிறது என்று சுகாதார அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல நாடாளுமன்றத்தில் தெரிவித்தார்.

பிரேமநாத் தொலவத்த, ரோகினி கவிரத்ன, எதிர்க்கட்சித்தலைவர் சஜித் பிரேமதாஸ உள்ளிட்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள் சிலர் சபையில் எழுப்பிய கேள்விகளுக்குப் பதிலளித்த அமைச்சர் ரம்புக்வெல்ல –

இலங்கையில் சமீபகாலமாக எழுந்துள்ள சில பிரச்சினைக்குத் தீர்வாக இந்தத் திட்டம் இருக்கும் என்றும் நம்பிக்கை வெளியிட்டார்.

இது இலங்கையில் உள்ள இளம் பெண்கள் மற்றும் சிறுமிகள் எதிர்கொள்ளும் ஒரு பிரச்சினை என்பதை நான் ஏற்றுக்கொள்கிறேன். இருப்பினும் இது எங்கள் கலாசார மற்றும் சமூக கட்டுப்பாடுகளின் விளைவாக இலங்கையில் அடிக்கடி பொதுமக்கள் மத்தியில் பரவலாக இது விவாதிக்கப்படவில்லை, என்று அமைச்சர் கூறினார்.

பெண்கள், தாங்கள் எதிர்கொள்ளும் உடல்நலப் பிரச்சினைகளைச் சமாளிக்கத் தேவையான இந்த சுகாதாரத் துவாய்களை பெற்றுக்கொள்ள முடியாததால் அவர்கள் பாடசாலைகளுக்கு செல்வதைத் தவிர்ப்பது கவலையளிக்கிறது. என்று சுகாதார அமைச்சர் கூறினார்.

சானிட்டரி பேட் என்ற சுகாதார துவாய்களுக்கு 42 வீத வரி விதிக்கப்படுவதாக நாடாளுமன்ற உறுப்பினர் ரோஹினி கவிரத்ன தெரிவித்தார். இதுவே அவற்றின் விலை உயர்வுக்கு காரணமாக அமைந்துள்ளன என்று அவர் குறிப்பிட்டார்.

இதேவேளை 2019 ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தல் பிரசாரத்தின் போது இந்த விடயத்தை எடுத்துக் கூறியபோது தாம் கேலிக்குள்ளாக்கப்பட்டதாக குறிப்பிட்ட எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ, இன்று அது தீவிரமான பிரச்சினையாக மாறியுள்ளது என்று தெரிவித்தார்.

எனவே குறைந்தபட்சம் செனிட்டரி பேட்களுக்கு விதிக்கப்படும் வரியைக் குறைக்க அரசாங்கம் ஏதாவது ஒரு தீர்வைக் கொண்டு வர வேண்டும் என்று அவர் கோரிக்கை விடுத்தார்.

# பீரிஸின் அரசியல் பயணம் எமக்கு சவால் கிடையாது!

## கூறுகிறார் சாகர காரியவசம்



ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணியின் தவிசாளர் ஜீ.எல்.பீரிஸின் அரசியல் பயணம் தமக்கு சவால் கிடையாது என கட்சியின் பொதுச்செயலாளர் சாகர காரியவசம் தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

ஜீ.எல்.பீரிஸ் வெறும் அரசியல் பயணமொன்றை ஆரம்பித்துள்ள காரணத்தால் நிறைவேற்று சபையைக் கூட்டி சரியான முறையில்அவரைதவிசாளர்பதவியிலிருந்து நீக்க நடவடிக்கை எடுக்கப்படும் என சாகர தெரிவித்துள்ளார்.

ஜீ.எல். இன் அரசியல் பயணம் தமது கட்சிக்கு சவால் கிடையாது எனவும் அவரை பதவியிலிருந்து நீக்குவதற்கு அவசரமில்லை எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

கட்சியின் யாப்பிற்கு அமைவாக ஜீ.எல். பீரிஸ் பதவி நீக்கப்பட உள்ளார் எனத் தெரிவித்துள்ளார்.

எவ்வாறெனினும், ஜீ.எல்.பீரிஸ் கட்சிக்கு சிறந்த முறையில் சேவையாற்றியவர் என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

# உணவு கடன்வாங்கும் நிலைக்கு தள்ளப்பட்டுள்ளன குடும்பங்கள்!

## ஐக்கிய நாடுகளின் உலக உணவுத் திட்டம் தகவல்

இலங்கையில் நிலவும் உணவுப் பாதுகாப்பின்மை காரணமாக சில குடும்பங்கள் உணவைக் கடன் வாங்கும் நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளன என ஐக்கிய நாடுகளின் உலக உணவுத் திட்டம் தெரிவித்துள்ளது.

இலங்கையில் உணவுப்பாதுகாப்பு நிலைமை ஸ்திரமற்றதாகவே இருப்பதாக, ஐக்கிய நாடுகளின் அமைப்பு தெரிவித்துள்ளது.

ஒகஸ்ட் மாதத்தின் வீட்டு உணவுப் பாதுகாப்பு ஆய்வுகளின்படி, மக்கள் தொகையில் மூன்றில் ஒரு பகுதியினர் இப்போது கடுமையான உணவுப் பாதுகாப்பின்மையை எதிர்கொள்கின்றனர்.


இது ஜூன் மாதத்துடன் ஒப்பிடும்போது அதிகரிப்பு ஆகும். 1948 இல் இலங்கை சுதந்திரம் பெற்ற பின்னர் அதன் மோசமான பொருளாதார நெருக்கடியுடன் தொடர்ந்து போராடி வருகிறது.

வரலாறு காணாத உயர் விலை அதிகரிப்பதால், உணவுப் பாதுகாப்பு ஆபத்தானதாகவே உள்ளது. உணவுப் பாதுகாப்பு ஆய்வுகளின்படி, மூன்றில் ஒரு பங்கு மக்கள் (37 சதவீதம்) இப்போது கடுமையான உணவுப்பாதுகாப்பின்மையை எதிர்கொள்கின்றனர்.

குடும்பத்தில் எட்டு குடும்பங்கள் உணவைத் தியாகம் செய்தல், உணவை கடன் வாங்குதல் மற்றும் உண்ணும் உணவின் எண்ணிக்கையைக் குறைத்தல் போன்ற உணவு அடிப்படையிலான சமாளிப்பு உத்திகளுக்குத் தொடர்ந்து மாறி வருகின்றன.

நெருக்கடியானது சமூகத்தின் பல்வேறு பிரிவுகளில் சமமற்ற தாக்கங்களை ஏற்படுத்துகிறது. இது பலவிதமான பிளவுகளை ஏற்படுத்தும். ஆண் தலைமைத்துவ குடும்பங்களை விட பெண் தலைமைத்துவ குடும்பங்கள் மோசமாக உள்ளன.

அதே நேரத்தில் பெருந்தோட்டம் மற்றும் நகர்ப்புறங்களில் உள்ளவர்கள் கிராமப்புறங்களை விட மோசமாக உள்ளனர். கல்வி நிலைகளிலும் வருமான வழிகளிலும் இதே போன்ற ஏற்றத்தாழ்வுகளைக் காணலாம். உலக உணவுத் திட்டம், இது வரை 60 ஆயிரத்துக்கும் அதிகமான மக்களை நிதி உதவி மற்றும் வவுச்சர் உதவிகளை வழங்கியுள்ளது.



# கிளிநொச்சியில்
# ஐஸ்வர்யம் பெருவிருந்து மண்டபம்
# Ishwaryam Banquet Hall



Tel:- 021 228 3701, 071 7354308

Whatsapp:- 071 7736 4308


No.315, Kandy Road,
Kilinochchi



- அன்பான வரவேற்பு
- தமிழர் பாரம்பரிய உணவு வகைகள்
- இந்தியன் இனிப்புப் பண்டங்கள்
- இந்தியன் உணவுவகைகள்
- Online booking இற்கு விசேட விலைக்கழிவாக 30% பெற்றுக்கொள்ளலாம்.

சகலவிதமான நிகழ்வுகளும் புதிதாக வடிவமைக்கப்பட்ட அனைத்து வசதிகளுடனும் அழகான விருந்துபசார மண்டபம்

# ISHWARYAM BANQUET HALL
## BANQUET MEALS HALL





**FULL OPTION**

### MAIN DIHES
Vegitable Fried Rice with Panner & Ghee - 900/=
Chiken Fried Rice with Vegetable - 1100/=
Kothu Rotty With Vegitable in Indian Style

### DESSERT
ice Cream Cup - 60/=
Fruit Salad - 60/=
I ce Cream & Fruit Salad - 100/=
Cream Caramel - 120/=

**SPECIAL MENU PACKAGE**

### BEVERAGES
jUICE 200 ml - 70/=
Milk Drink - 70/=
Cocacola M - 70/=
Pepsi M - 70/=
Swchpees Tin - 250/=
Coca Cola Tin - 250/=

# கடற்பசுக்களுக்குப் பாதுகாப்பகம் அறிவித்து தமிழக அரசு உத்தரவு!



சென்னை,செப்.23

வாழ்விட இழப்பு காரணமாக அழிந்து வரும் கடற்பசுக்களுக்கான பாதுகாப்பகத்தை அறிவித்து தமிழக அரசு உத்தரவிட்டுள்ளது. இந்தியாவிலேயே இதுதான் முதல் கடற்பசு பாதுகாப்பகமாகும்.

இதுகுறித்து தமிழக அரசு வெளியிட்ட செய்திக் குறிப்பில் கூறப்பட்டு இருப்பதாவது:-

தமிழகத்தில் அழிந்துவரும் நிலையில் உள்ள மிக அரிதான கடற்பசு (டுகாங்) இனத்தையும் அதன் கடல் வாழ்விடங்களையும் பாதுகாக்கும் பொருட்டு மன்னார் வளைகுடா, பாக்விரிகுடா பகுதியில் கடற்பசு பாதுகாப்பகம் அமைக்கப்படும் என்று தமிழக அரசால் 2021 ஆம் ஆண்டு செப்டம்பர் 3 ஆம் திகதி சட்டமன்றத்தில் அறிவிக்கப்பட்டது. அதை செயல்படுத்தும் வகையில், 448 சதுர கி.மீ. பரப்பளவில், தஞ்சாவூர் மற்றும் புதுக்கோட்டை மாவட்டங்களின் கடலோரப் பகுதிகளை உள்ளடக்கிய பாக்விரிகுடாவில் கடற்பசு பாதுகாப்பகமாக அறிவித்து சுற்றுச்சூழல், காலநிலை மாற்றம் மற்றும் வனத்துறை 21ஆம் திகதி (நேற்று முன்தினம்) ஆணை பிறப்பித்துள்ளது.

உலகின் மிகப்பெரிய தாவரவகை கடல் பாலூட்டிகளான, கடற்பசுக்கள் கடற்புற்களை உண்டு வளர்ந்து வருகின்றன. கடற்பசு இனங்களை பாதுகாப்பதனால், கடல் பகுதிகளுக்கு அடியில் உள்ள கடற்புற்களை பாதுகாக்கவும், மேம்படுத்தவும், வளிமண்டல கார்பனை அதிக அளவில் நிலைப்படுத்தவும் உதவுகிறது. கடற்புல் படுகைகள் வணிக ரீதியாக மதிப்புமிக்க பல மீன்கள் மற்றும் கடல்வாழ் உயிரினங்களுக்கு இனப்பெருக்கம் செய்ய ஏதுவாகவும், உணவளிக்கும் இடமாகவும் உள்ளன.

பாக்விரிகுடாவை ஒட்டிய கரையோர மக்கள் கடற்பசுக்களை பாதுகாப்பதன் அவசியத்தைப் புரிந்து கொண்டு, பலமுறை மீன்பிடி வலையில் சிக்கிய கடற்பசுக்களை மீனவர்கள் வெற்றிகரமாக கடலில் விடுவித்




துள்ளனர். இதனை பாராட்டி தஞ்சாவூர், புதுக் கோட்டை மற்றும் ராமநாதபுரம் மாவட்டங்களில் அவர்களுக்கு அரசு சார்பில் பாராட்டு சான்றிதழ் வழங்கப்பட்டுள்ளது.

வன விலங்குகள் பாதுகாப்பு சட்டத்தின் கீழ் கடற்பசு இனங்கள் பாதுகாக்கப்படுகின்றன. இருப்பினும், அதன் வாழ்விட இழப்பு காரணமாக கடற்பசு இனங்களின் எண்ணிக்கை மிகவும் குறைந்து வருகிறது. தற்போது சுமார் 240 கடற்பசுக்கள் மட்டுமே இருப்பதாக



மதிப்பிடப்பட்டுள்ளது. பெரும்பான்மையான கடற்பசுக்கள் தமிழ்நாட்டின் கடற்கரையில் (பாக்விரிகுடா) காணப்படுகின்றன. எனவே, கடற்பசுக்கள் மற்றும் அவற்றின் வாழ்விடத்தை அழிவிலிருந்து பாதுகாக்க வேண்டிய உடனடித் தேவை தற்போது எழுந்துள்ளது. இந்த நோக்கங்களை நிறைவேற்ற, தமிழக அரசு, கடலோர சமூகத்தினருடன் குறிப்பாக உள்ளூர் மீனவர்களுடன் ஆலோசனை நடத்திய பிறகு, பாக்விரிகுடாவில் கடற்பசு பாதுகாப்பகம் அமைத்து அறிக்கை வெளியிடப்பட்டுள்ளது. இந்த அறிவிப்பின் மூலம் எந்த ஒரு புதிய கட்டுப்பாடுகளோ நிபந்தனைகளோ அங்கு வாழும் மக்களுக்கு விதிக்கப்படப்போவதில்லை. பாக்விரிகுடாவில், தமிழகம் அறிவிக்கை செய்துள்ள இந்த கடற்பசு பாதுகாப்பகம், இந்தியாவிலேயே முதன்முதலாக அமைக்கப்படும் பாதுகாப்பகம் எனும் பெருமைக்குரியதாகும். இதனால், தமிழ்நாட்டில் மட்டுமல்லாமல் உலகெங்கிலும் உள்ள வன உயிரின பாதுகாவலர்கள் அனைவரும் பெருமை கொள்வர். நமது நாட்டில் கடல்சார் உயிரினங்களைப் பாதுகாக்கும் நடவடிக்கைகளில் இது ஒரு முக்கிய மைல்கல்லாக விளங்கும். - இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

# புதிதாக 48 ஆயிரம் தொழில் நிறுவனங்கள் தமிழகத்தில் 14 ஆண்டுகளில் உருவாக்கம்!

## மோடியின் வேலை வாய்ப்புத் திட்டம் அங்கு முன்னணியில்



சென்னை,செப்23

பிரதமரின் வேலை வாய்ப்பு திட்டத்தை, தமிழகம் சிறப்பாக செயல்படுத்தி வருகிறது. 14 ஆண்டுகளில் தமிழகத்தில் மட்டும் புதிதாக 48 ஆயிரம் தொழில் நிறுவனங்கள் உருவாகி உள்ளன என திட்டத்தின் துணை தலைமை செயல் அதிகாரி ராஜன்பாபு தெரிவித்தார்.

பி.எம்.இ.ஜி.பி. எனும் பிரதமரின் வேலைவாய்ப்பு உருவாக்கும் திட்டம் தொடர்பான, ஒரு நாள் பயிலரங்கம், சென்னையில் நேற்று முன்தினம் நடந்தது. பயிலரங்கை துவக்கி வைத்து, துணை தலைமை செயல் அதிகாரி ராஜன்பாபு பேசியதாவது:-

பிரதமரின் வேலைவாய்ப்பு திட்டம், பாரம்பரிய தொழில் துறையை கவனத்தில் வைத்து உருவாக்கப்பட்டது. தற்போது, தொழில் முனைவோரை உருவாக்கும் நோக்கில் செயல்பட்டு வருகிறது. இந்த திட்டம் சிறப்பாக செயல்பட, வங்கிகள் முதுகெலும்பாக செயல்படுகின்றன.

கடந்த 2008 முதல் 2022 மார்ச் வரை, இந்த திட்டத்தின் வாயிலாக, 7.82 லட்சம் தொழில் நிறுவனங்கள் துவங்கப்பட்டுள்ளன. இதில் தமிழகத்தில் மட்டும், 48 ஆயிரத்து 220 நிறுவனங்கள் துவங்கப்பட்டுள்ளன. இது வரை, 64 லட்சம் வேலைவாய்ப்புகள் உருவாக்கப்பட்டுள்ளன. இதில், தமிழகத்தில் மட்டும் 4.82 லட்சம் வேலை வாய்ப்புகள் உருவாகி உள்ளன. இது வரை 51 ஆயிரம் கோடி ரூபா கடனாக வழங்கப்பட்டு உள்ளது. நடப்பு நிதியாண்டில், 1.5 லட்சம் நிறுவனங்கள் துவக்கவும், இதன் வாயிலாக 3,000 கோடி ரூபாய் கடன் உதவி வழங்கவும் இலக்கு நிர்ணயிக்கப்பட்டு உள்ளது.

தமிழகத்திற்கு, 5,800 நிறுவனங்கள் துவங்கவும், 170 கோடி ரூபாய் கடன் உதவி வழங்கவும் இலக்கு நிர்ணயிக்கப்பட்டு உள்ளது. வங்கிகள் கடன் விண்ணப்பங்களை நிராகரிப்பதை குறைக்க வேண்டும். ஆண்டுக்கு 5,000 விண்ணப்பங்கள் பெறப்பட்டால், அதில் 20 சதவீதம் விண்ணப்பங்கள் மட்டும் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்படுகின்றன. நீலகிரி, கள்ளக்குறிச்சி மற்றும் மயிலாடுதுறை மாவட்டங்கள், இந்த திட்டத்தை செயல்படுத்துவதில் பின்னடைவில் உள்ளன. இதர மாநிலங்களை விட, இந்த திட்டம் தமிழகத்தில் சிறப்பாக செயல்படுத்தப்பட்டு வருகிறது. - இவ்வாறு அவர் பேசினார்.

நிகழ்ச்சியில், தமிழக தொழில் வணிக இயக்குநரக கூடுதல் கமினர் கிரேஸ் லால்ரிண்டிகி பச்சுவா, இந்தியன் ரிசர்வ் வங்கி உதவி பொது மேலாளர் அமிர்தவள்ளி, காதி மற்றும் கிராமத் தொழில் இயக்குனர் சுரேஷ் பங்கேற்றனர்.

## குண்டு துளைக்காத ஜாக்கெட்டுகள் உற்பத்தி இந்தியத் தயாரிப்பில் சீனாவுக்கு இடமில்லை



இந்திய இராணுவ வீரர்களுக்கான, குண்டு துளைக்காத ஜாக்கெட்டுகளை தயாரிப்பதற்கு தேவையான மூலப் பொருள்களை, சீன நிறுவனங்களிடமிருந்து பெற்று பயன்படுத்தக் கூடாது என தடை விதிக்கப்பட்டுள்ளது.

இராணுவத்தினருக்கு வழங்கப்படும் குண்டு துளைக்காத ஜாக்கெட்டுகளுக்கு, சீனாவிலிருந்து பெறப்பட்ட மூலப்பொருள்களைரகசியமாகப் பயன்படுத்துவதைத் தடுக்கும் வகையில், இந்திய தயாரிப்பாளர்கள், சீன நிறுவனங்களுடன் தொடர்பு கொள்ளவில்லை என்று சான்றளிக்க வேண்டும் என பாதுகாப்பு அமைச்சகம் அறிவித்துள்ளது.

அண்மைக் காலமாக, இந்திய இராணுவத்தினருக்கு உள்நாட்டில் தயாரிக்கப்பட்ட குண்டு துளைக்காத ஜாக்கெட்டில், குறிப்பிடத்தக்க அளவில், சீன மூலப்பொருள்கள் பயன்படுத்தப்பட்டிருப்பது தெரியவந்தது.

இதையடுத்து, தற்போது, சீன நிறுவனங்களிடமிருந்து பெறப்பட்ட மூலப் பொருள்களை பயன்படுத்தவில்லை என தயாரிப்பாளர்கள் சான்று வழங்க உத்தரவிடப்பட்டு உள்ளது.

காலைக்கதிர்
Kalaikkathir



# கிராமியப் பொருளாதாரப் புத்துயிரூட்டல் பொறிமுறையை உருவாக்க கலந்தாய்வு!



(இ.கலையமுதன்)

உணவு கையிருப்புப் பாதுகாப்பு மற்றும் போக்கை உறுதிப்படுத்துவதற்காகக் கிராமியப் பொருளாதாரப் புத்துயிரூட்டல் கேந்திர நிலையங்களை வலுவூட்டுவதற்கான பல்வகைத் துறைசார் ஒருங்கிணைந்த பொறிமுறையை உருவாக்குவதற்கான கலந்துரையாடல் யாழ்ப்பாண மாவட்டத்தில் இடம்பெற்றது.

யாழ்ப்பாண மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் புதன்கிழமை காலை யாழ்ப்பாண மாவட்ட செயலர் க.மகேசன் தலைமையில் இடம்பெற்றது.

இதன்போது உணவுப் பாதுகாப்பு மற்றும் போக்குத் தொடர்பான மாவட்ட ஒருங்கிணைந்த பொறிமுறை, உணவுப் பாதுகாப்பு மற்றும் போக்குத் தொடர்பான பிரதேச ஒருங்கிணைந்த பொறிமுறை, கிராமியப் பொருளாதார புத்துயிரூட்டல் கேந்திர நிலையம் போன்ற பொறிமுறைகள் அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டன.

இந்தக் கலந்துரையாடலில் மேலதிக அரசாங்க அதிபர் ம.பிரதீபன், மாவட்ட செயலக திட்டமிடல் பணிப்பாளர் செ.நிக்கொலஸ்பிள்ளை ஆகியோர் கலந்துகொண்டிருந்தமையுடன் இணையவழி மூலம் ஜனாதிபதியின் மேலதிக செயலாளர் ஜே.ஜி.எல். சுலக்சன, லெப்டினன்ட் கேணல் ஆதித்ய மெண்டிஸ் ஆகியோரும் கலந்து கொண்டிருந்தமையுடன் பல்வேறு திணைக்கள பிரதேச செயலக அதிகாரிகள் பலரும் கலந்து கொண்டனர்.

# கிழக்கு மாகாண விளையாட்டுப் பேரவையின் எதிர்கால வேலைத்திட்டங்கள் பற்றி ஆய்வு!



விளையாட்டுத்துறை அமைச்சால் நியமிக்கப்பட்ட கிழக்கு மாகாண விளையாட்டுப் பேரவை (செவ்வாய்க்கிழமை) முற்பகல் கிழக்கு மாகாண ஆளுநர் அனுராதா யஹம்பத் தலைமையில் கூடிய பாடசாலை மட்டத்தில் அடையாளம் காணும் விளையாட்டு வீரர்களை தேசிய மட்டத்திற்கு கொண்டு செல்லும் வரை அவர்களைப் பாதுகாப்பதற்கான விசேட திட்டம் ஒன்றை நடைமுறைப் படுத்துவது தொடர்பில் விசேட கவனம் செலுத்தப்பட்டது.

அத்துடன், பாடசாலை நேரம் முடிவடைந்த பின்னர் விளையாட்டுக் கழகங்கள் மற்றும் விளையாட்டு பயிற்றுவிப்பு அமைப்புகளுக்கு அந்த விளையாட்டு வீரர்களை இடமாற்றம் செய்வதற்கான விசேட வேலைத்திட்டம் ஒன்றை அமைப்பது தொடர்பிலும் இங்கு விசேட கவனம் செலுத்தப்பட்டது. அந்தத் திறமையான விளையாட்டு வீரர்கள் சர்வதேச அளவிலான விளையாட்டுப் போட்டிகளில் பங்கேற்கவும், அவர்களின் நல்வாழ்வுக்காக மாகாண விளையாட்டு நிதியை நிறுவவும் இதன்போது முடிவு செய்தனர்.

இதேவேளை, மாகாண விளையாட்டுத் திணைக்களத்தை நடைமுறைப்படுத்துவதற்கான முன்மொழிவுகள் இருந்தால் ஒரு வாரத்திற்குள் நடைமுறைப்படுத்துமாறும் ஆளுநர் அதிகாரிகளை அறிவுறுத்தியுள்ளார்.

இந்நிகழ்வில் மாகாண பிரதம செயலாளர் துசித பி. வணிகசிங்ஹ, ஆளுநரின் செயலாளர் எஸ்.பி. மதநாயக்க, மாகாண கல்விச் செயலாளர் எச்.ஈ.எம்.டப்ளியு. ஜி திஸாநாயக்க, மாகாண விளையாட்டுப் பணிப்பாளர் என்.எம். நௌபீஸ் உட்பட மாகாண விளையாட்டு சபையை பிரதிநிதித்துவப்படுத்தும் உறுப்பினர்களும் கலந்துகொண்டனர்.

# கோதுமை மா தட்டுப்பாட்டின் எதிரொலி மூடப்படும் ஆயிரக்கணக்கான பேக்கரிகள்

நாட்டில் நிலவி வரும் கோதுமை மா தட்டுப்பாடு காரணமாக சுமார் இரண்டாயிரம் பேக்கரிகள் மூடப்பட்டுள்ளன எனத் தெரியவருகிறது.

இவ்வாறு பேக்கரிகள் மூடப்பட்டதால் சுமார் இரண்டு லட்சம் பேர் தொழில்களை இழந்து நிர்க்கதியாகியுள்ளனர்.

இந்த விடயத்தை அகில இலங்கை பேக்கரி உரிமையாளர் சங்கத் தலைவர் என்.கே.ஜயவர்தன தெரிவித்துள்ளார்.

இந்த நிலைமையால் நாட்டில் பாண் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது எனக் குறிப்பிட்டுள்ளார்.

டொலர் இல்லாத காரணத்தால் நாடு முழுவதிலும் கோதுமை மாவிற்கு தட்டுப்பாடு நிலவுகின்றது எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

அத்துடன் இலங்கையில் சுமார் ஏழாயிரம் பேக்கரிகள் காணப்பட்டன எனவும், ஏற்கனவே இரண்டாயிரம் பேக்கரிகள் மூடப்பட்டுள்ளன எனவும், அவற்றில் பணியாற்றியவர்கள் பெரும் சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

# இலங்கை பாதுகாப்பான நாடு என்ற செய்தியை பரப்புமாறு காணி அமைச்சர் ஹரின் கோரிக்கை!

சுற்றுலா மற்றும் காணி அமைச்சர் ஹரின் பெர்னாண்டோ, இலங்கையில் வாழும் இந்தியர்களிடம் இலங்கை மிகவும் பாதுகாப்பான நாடு என்ற செய்தியை பரப்புமாறு வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இது தொடர்பில் ஊடகங்களுக்குக் கருத்து தெரிவித்த அவர் –

இலங்கை பாதுகாப்பற்ற நாடாக மாறிவிட்டதாக கூறுகின்ற பல எதிர்மறையான கருத்துக்கள் காணப்படுகின்றன.

'நாங்கள் சாலையில் பட்டினி கிடக்கவில்லை, தெருக்களில் இறக்கவும் இல்லை.' இந்த நிலையில் எங்கள் முக்கிய கவனம் இந்தியாவாகும் என்று அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

இந்தியா எங்கள் அண்டை நாடு. நாங்கள் நிறைய கலாசார ஒற்றுமைகளையும் பாரம்பரியத்தையும் பகிர்ந்து கொண்டிருக்கிறோம். தற்போது, இலங்கையில் இருந்து இந்தியாவிற்கு வாரந்தோறும் நூற்றுக்கும் மேற்பட்ட விமானங்கள் சேவையில் உள்ளன என்றும் அமைச்சர் தெரிவித்துள்ளார்.

# டைனோசர் காலத்துக்கும் முற்பட்ட ஜெல்லிமீன்கள் கண்டுபிடிக்கப்பட்டன

வட மேல் மாகாண பல்கலைக்கழகத்தின் புதிய ஆய்வில் டைனோசர்களின் காலத்துக்கு முற்பட்ட ஜெல்லிமீன்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

பூமியில் டைனோசர்களின் காலத்துக்கு முன்னர் பல மில்லியன் ஆண்டுகளாக கடல் நீரோட்டங்களில் அலைந்து திரிந்த ஜெல்லிமீன்கள் இவை என அந்த ஆய்வு தெரிவித்துள்ளது.

கடற்பிராந்தியத்தில் இதுவரை அறியப்படாத 10 வகையான மெல்லிய மற்றும் வெளிப்படையான கூடாரங்களைப் போன்ற அமைப்பைக் கொண்ட மிதக்கும் காளான்களைப் போன்ற ஜெல்லிமீன்களே இவ்வாறு கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.



# அரசின் புதிய ஓய்வூதிய வயது திருத்தத்தால் வெற்றிடங்களை நிரப்ப வைத்தியர்கள் இல்லை!

அரசு ஊழியர்களின் ஓய்வூதிய வயது எல்லை தொடர்பாக பொது நிர்வாக அமைச்சகம் வழங்கிய சமீபத்திய சுற்றறிக்கையின் படி, 300 சிறப்பு வைத்தியர்கள் 2022 டிசெம்பர் 31 அல்லது அதற்கு முன்னர் பொது சேவையிலிருந்து ஓய்வு பெற வேண்டும்.

2021 ஆம் ஆண்டில் நாடாளுமன்றத்துக்கு வழங்கப்பட்ட இந்த ஆண்டுக்கான திட்டத்தில், அனைத்து அரசு ஊழியர்களின் ஓய்வூதிய வயது 65 ஆண்டுகள் வரை நீட்டிக்கப்பட்டது. இருப்பினும், சமீபத்தில் வழங்கப்பட்ட திட்டத்தின் படி அரசாங்க ஊழியர்களின் ஓய்வூதிய வயது 60 ஆகக் குறைக்கப்பட்டது.

அதன்படி, 60 வயது அல்லது அதற்கு மேற்பட்ட அனைத்து அரசாங்க ஊழியர்களும் 2022 டிசெம்பர் 31 இற்குள் ஓய்வுபெற வேண்டும்.

இந்த உத்தரவின் கீழ், சிறப்பு மருத்துவர்களின் ஓய்வு காரணமாக ஏற்படும் வெற்றிடங்களை நிரப்ப, மாகாண மற்றும் ஆரம்ப வைத்தியசாலைகளில் ஏற்கனவே உள்ள சிறப்பு வைத்தியர்களை இடமாற்றம் செய்ய வேண்டும்.

முதலில் வெற்றிடங்களை நிரப்பாமல் சிறப்பு வைத்தியர்களை மாற்ற முடியாது என்று சிறப்பு வைத்தியர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

வழக்கமாக, ஏற்கனவே வெளிநாட்டில் பயிற்சி பெற்ற சிறப்பு வைத்தியர்கள் மட்டுமே இந்த முறையில் மாற்றப்பட முடியும்.

எவ்வாறாயினும், நாட்டின் தற்போதைய நெருக்கடியைக் கருத்தில் கொண்டு, சிறப்பு வைத்தியர்கள் ஒரு குறிப்பிடத்தக்க குழு வெளிநாட்டில் இருக்க வாய்ப்புள்ளது என்று சிறப்பு வைத்தியர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

இந்நிலையில், தொலைநிலை வைத்தியசாலைகள் உட்பட முழு சுகாதார சேவையும் சரிந்துவிடும் என்று சங்கம் சுட்டிக்காட்டியுள்ளது.

புதிய சுற்றறிக்கையின் படி, கொழும்பு தேசிய வைத்தியசாலையின் 43 நிபுணர்கள், கண்டி தேசிய வைத்தியசாலையின் 30 நிபுணர்கள், கராபிட்டியா கற்பித்தல் வைத்தியசாலையின் 17 நிபுணர்கள், லேடி ரிட்ஜ்வே குழந்தைகள் வைத்தியசாலையின் 15 நிபுணர்களும், அபெக்ஷாவைத்தியசாலையின் 09 நிபுணர்களும் ஓய்வு பெற வேண்டும் என்று சங்கம் சுட்டிக்காட்டுகிறது.

# வீரமும் விவேகமும்




என்.சத்தியமூர்த்தி

இரண்டாவது எலிசபெத் மகாராணியின் இறுதிச்சடங்கில் கலந்து கொள்ள லண்டன் சென்றிருந்த ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, அங்குள்ள இலங்கை மக்களை சத்தித்த போது, இனப் பிரச்சினைக்குத் தீர்வு மற்றும் அதிகாரப் பகிர்வு குறித்தும் பேசியுள்ளார். குறிப்பாக, தான் கடந்த முறை பிரதமராக இருந்த போது, முன்னெடுத்த முயற்சிகள் குறித்தும் கருத்து தெரிவித்துள்ளார்.

இந்த விடயத்திலும், அரசு சார்ந்த மற்ற பிரச்சினைளிலும் சரி, தனது முடிவை செயல்படுத்தும் அதிகாரம் ரணிலுக்கு இருக்கிறதா என்பது கேள்விக்குறியே. நாடாளுமன்றத்தில் ராஜபக்ஷக்களின் ஆதரவு இல்லாமல் ஒரு துரும்பைக் கூட எடுத்துப்போடமுடியாதுஎன்பதேஉண்மை. அதாவது, யாரும் அறியாமலே, நிறைவேற்று ஜனாதிபதியின் அனைத்து அதிகாரங்களும் ராஜபக்ஷ ஆதரவாளர்கள் மூலம் நாடாளுமன்றத்திற்குச் சென்று விட்டது.

ராஜபக்ஷக்களின் பதவி விலகலை அடுத்து, இதுதானே, அறகலயா போராட்டக்காரர்களின் இரண்டாவது முக்கிய கோரிக்கை. இத்தனை தசாப்தங்களாக,



அரசியல் தலைமைகள் செய்ய விரும்பாத காரியத்தை ஆண்டவனே செய்து விட்டான். இதில் துவங்கி, இது குறித்த அரசமைப்பின் 22 ஆவது திருத்தத்தை நாடாளுமன்றம் ஏற்றுக் கொள்ள வேண்டியது, தவிர்க்க முடியாத விடயமாகி விட்டது.

காரணம், ரணிலை ஜனாதிபதியாக ஏற்றுக்கொள்ள சம்மதித்த நேரத்திலேயே, ராஜபக்ஷக்கள் கணக்கு போட்டுவிட்டார்கள். நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறை ஒழியும் போது, தமக்கு இன்னமும் அதிகமாக கட்டுப்பட்டு நடப்பவரிடமே பிரதமர் பதவியும் அத்துடன் அனைத்து அதிகாரங்களும் சென்று சேர்ந்து விடும். இதில், புத்திசாலி, அறகலயா போராட்ட தலைமைகளா, அல்லது ரணிலா, அல்லது ராஜபக்ஷக்களா?

என்றாலும், நாட்டின் பொருளாதார சூழலில், மேற்குலக நாடுகள், ராஜபக்ஷக்களிடமோ அவர்களின் அடிவருடியிடமோ அனைத்து அதிகாரங்களும் சென்ற டைவதை ஏற்றுக் கொள்ளமாட்டோம் என்று தயங்காமல் சொல்வார்கள். அதனால், தற்போதைய பிரதமர் தினேஷ் குணவர்த்தனே மாற்றப்படுவாரா? அவ்வாறானால், அவருக்கான மாற்று யார், என்பது தெரியாமல் நிறைவேற்று ஜனாதிபதி முறையே ஒழிக்கப்படுமா என்ற கேள்வியும் எழுகிறது.

இந்த பின்னணியில் தான், மஹிந்த ராஜபக்ஷ மீண்டும் பிரதமராகிறார், இல்லை, இல்லை, பஸில் திரும்பியும் வருகிறார் என்பன போன்ற ஹேஷ்யங்கள் சமூக வலைதளங்களில் பரப்பப்படுகின்றன. இவை உண்மை என்றால், அவர்களுடைய மூத்த சகோதரர் சமலின் மகன் சசீந்திர ராஜபக்ஷ மீண்டும் இணை அமைச்சராக பதவியேற்றுள்ளமை, மக்கள் தங்களை ஏற்றுக்கொள்கிறார்களா, என்று அறிந்து கொள்வதறகான வெள்ளோட்டம் மட்டுமே.

**தூசி தட்டி எடுத்து...**

லண்டனில் ஜனாதிபதி அதிகாரப் பகிர்வு குறித்து மேலோட்டமாக பேசியுள்



ளமை குறித்து, தமிழ் தேசிய கூட்டமைப்பு அடுத்த நகர்வுகளை முன்னெடுக்க வேண்டும். ஏன் என்று தெரியாது, நகமும் சதையுமாக இருந்த ரணில் – சுமந்திரன் அணி சேர்ந்து இருந்தவர்கள், அண்மை காலமாக ஏழாம் பொருத்தில் போய் நிற்கிறது. இல்லையென்றால், ரணில், ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனா கீழ் பிரதமராக இருந்த காலகட்டத்தில் சுமந்திரனுடன் சேர்ந்து எடுத்த அதிகாரப் பகிர்வுத் திட்டங்களை தற்போது பின்னவரே மீண்டும் தூசி தட்டி முன்னெடுத்திருப்பார்.

அதிகாரப் பகிர்வுத் திட்டம் குறித்த பேச்சுவார்த்தைகளில் பாரிய முன்னேற்றங்கள் ஏற்பட்டுள்ளன என சுமந்திரனும் அப்போது குறிப்பிட்டிருந்தார். அதிலும் குறிப்பாக, இவை அனைத்துமே அன்றைய அரசால் முன்னெடுக்கப்பட்ட புதிய அரசியல் நிர்ணய சபை பணியின் ஒரு பகுதியாக அமைந்தமையை அழுத்திக் குறிப்பிடப்பட வேண்டும்.

அன்று அந்த முடிவுகளுக்கு அரசியல் சட்ட வடிவம் கொடுக்க ரணில் முன்வந்திருப்பாரா என்பது இன்னமும் கேள்விக்குறிதான். ஆனால், அவரது முழு ஆதரவும் அரசியல் ரீதியாகவும், அமைப்பு ரீதியாகவும் அந்த தீர்வு திட்டத்திற்கு இருந்தது நிஜம். அதனை அவராலும் மறுக்க முடியாது.

அதிலும் குறிப்பாக, சர்வதேச நடவடிக்கைகளை வைத்து நோக்கும் போது, மேற்குலகில் இருந்து பாரிய பொருளாதார உதவி இலங்கைக்கு கிடைப்பதற்கு கூட, அரசு, இனப்பிரச்சினைக்கான தீர்வு திட்டத்திற்கு சட்ட வடிவம் கொடுத்து அதனை செயல்படுத்தியும் காட்ட வேண்டும்.

இதனஷ்யே சர்வதேச பொறிமுறையின் ஓர் அங்கமாக எடுத்துக் கொண்டு, தமிழர் தரப்பு உள்நாட்டிலேயே அரசியல் செய்து, தங்களுக்கான தீர்வு திட்டத்தை பெற்றுக் கொள்ளவேண்டும். குறிப்பாக, அரச தரப்பை சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்த வேண்டும் என்று கடிதம் எழுதிய ஏழு கட்சிகளுமே இதற்கான முன்னெடுப்புகளைச் செய்யலாம்.

**அரசியல் நஷ்டம்**

பிரித்தானியாவில் இருந்து திரும்பிய பிறகு, ஜனாதிபதி ரணில், அரசியல் தீர்வு குறித்து பேச்சுவார்த்தை நடத்த முன் வருவார் என்று எதிர்பார்க்கலாம். காரணம், போர் குற்றங்கள் குறித்த உள்நாட்டு பொறிமுறை விவகாரத்தை விட, அரசியல் தீர்வு அவரைப் பொறுத்த வரையில் இலகுவான விடயம்.

அதற்கு முன்னரே கூட, அரசியல் கைதிகள் விடயத்தில் அவர் சில – பல முடிவுகளை அறிவிக்கக்கூடும். இது போன்றே காணி அதிகாரம் என்ற அதிகாரப் பகிர்வு சார்ந்த தீர்வு திட்டத்திற்கும் அப்பால் சென்று, தொடர்ந்து தமிழர் பகுதிகளில் கோவில்கள் உள்ளிட்ட பகுதிகளில் இருந்து அரசே தமிழர் சார்ந்த நிலங்களை கபளிகரம் செய்து வருகிறது. முன்னர், இது, இராணுவ தரப்பினர் மட்டுமே செய்து வந்த தவறு.

இதனை எதிர்த்து, அந்தந்தப் பகுதிகளில் போராட்டம் நடத்துவதை தவிர தமிழர் தரப்புகள் செய்தது என்ன? வடக்கு, அல்லது கிழக்கு, இல்லை என்றால், சர்வதேசம் என்று எத்தனை நாள்தான் அரசியல் செய்வார்கள்? கொழும்பு என்றால், மேற்குலக தூதராலயங்களை தவிர்த்து அவர்களுக்கு வேறு வழி முறைகள் தெரியுமா?உதாரணத்திற்கு, நாடாளுமன்றத்தின் உள்ளேயோ, வெளியேயே உண்ணாவிரதம் இருக்க அவர்கள் தயாரா?

**அரசியல் நஷ்டம்**

அடுத்தடுத்த அரசுத் தலைமைகளை நம்பி ஏமாறிய தமிழர் சமூத்திற்கு, நம்பிக்கை கொடுக்கும் வகையில் தனது தலைமை நடந்தாலே போதும், அவர்களது அரசியல் தலைமைகள் தனது முன்னெடுப்புகளுக்கு முகம் கொடுக்கும் என்பதை ஜனாதிபதி ரணில் நன்றாகவே புரிந்து கொண்டிருப்பார்.

அந்த வகையில், அரசு தன்னிச்சையாக, அரசியல் கைதிகள் விவகாரத்தில் தமிழர் ஆதரவு முடிவுகளை அறிவித்து செயல்படுத்தினால், அதனால் எதிர்படும் அரசியல் நஷ்டம், தமிழ் அரசியல் தலைமைகளுக்கே. தற்போது அந்தத் தலைமைகள் மீது சுத்தமாக நம்பிக்கை இழந்து விட்ட தமிழ் மக்களில் ஒரு கணிசமான பகுதியினர், அரசு தரப்புடன் சாய்ந்து



செயல்படுவதற்கு, ஒரு காலகட்டத்தில் தயங்க மாட்டார்கள் என்ற நிலைமை தோன்றிவிடும்.

அந்த நிலைமை, அடுத்த ஜனாதிபதி மற்றும் நாடாளுமன்ற தேர்தல்களுக்கு முன்னரே கூட நிகழ்ந்து விடலாம். அது ரணிலின் வேகத்தையும், தமிழர் அரசியல் தலைமைகளின் விவேகத்தையும் பொறுத்தது. என்ன. இரண்டு தரப்புகளுமே, வேகத்திற்கு பெயர் போனவர்கள் அல்லர். தமிழர் தலைமைகள் விவேகம் குறித்தும் அறிய மாட்டார்கள்.

**ஏற்றுக் கொண்ட முடிவு**

தற்போது, முந்தைய அரசியல் தீர்வுத் திட்டம் குறித்து, தமிழர் தரப்போ, ஏன், சுமந்திரன் தனியாகவோ பேச வேண்டும். அது நாடாளுமன்றத்தின் உள்ளேயும் வெளியேயும் எதிரொலிக்க வேண்டும். எப்போது, ஆறு அல்லது ஏழு தமிழ் கட்சிகள் சேர்ந்து, இனப்பிரச்சினை குறித்து, இந்திய பிரதமர் நரேந்திர மோடிக்கும், சர்வதேசத்திற்கும் தனிதனியாக கடிதம்



எழுத முடிந்ததோ, அப்போதே அரசியல் தீர்வு குறித்தும் அவர்கள் ஒன்றாக செயல்பட தீர்மானித்து விட்டார்கள் என்றே கருத வேண்டும்.

குறிப்பாக, கடந்த ஜனவரி மாதத்தில், நரேந்திர மோடிக்கு அனுப்பிய கடிதத்தில், அரசியல் தீர்வு குறித்தும் அதற்கான பதிமூன்றாவது திருத்தம் செயல்படுத்தப்பட இந்தியா அழுத்தம் கொடுக்க வேண்டும் என்று குறிப்பிடப்பட்டிருந்தது. அதனையே இலங்கையின் அரசியல் – பொருளாதாரப் பிரச்சினைகள் ஒருவித சமன்நிலைக்கு வந்த பிறகு, இந்தியாவும் தற்போது ஜெனிவாவில் நடந்து கொண்டிருக்கும் ஐக்கிய நாடுகள் மனித உரிமை கவுன்ஸில் கூட்டத்தொடரில் தனது கோரிக்கையான முன்வைத்துள்ளது.

அதனைத் தொடர்ந்து, ஜெனிவா சென்று வந்த சுமந்திரன், இந்தியா பொதுவாகவே தமிழர்கள் ஏற்றுக் கொள்ளும் படியான அரசியல் தீர்விற்கு ஆதரவு தெரிவித்துள்ளதாக கூறி உள்ளார். அதாவது, பதின்மூன்று என்றால் பதிமூன்று, அதற்கும் அப்பால் என்றால், அதனையும் இந்தியா வரவேற்கும்.

இந்த நிலைபாட்டை இந்தியா கடந்த காலங்களில், ஜெனிவாவிலும், புது டெல்லியிலும் கொழும்புவிலும் கூட அழுத்தமாக கூறி உள்ளது. அதாவது, இலங்கை அரசு மற்றும் தமிழர் தரப்பு ஆகிய இரு தரப்பாரும் ஏற்றுக் கொள்ளும் என்ற ஒரு முடிவையும் இந்தியா வரவேற்கும்.

**யாரை நம்பி...**

தற்போதைய சூழ்நிலையில் தமிழர் தலைமைகள் என்ன செய்யலாம்? முதலில், அரச தரப்பு மீண்டும் ஒரு முறை புதிய அரசியல் நிர்ணய சபை என்று கூறி காலம் தாழ்த்த விட கூடாது. இதன் ஒரு பகுதியாக, கடந்த ரணில் அரசு அப்போதைய அரசியல் நிர்ணய சபையின் கமிட்டி செயல்பாடுகள் மூலம் எடுத்த முடிவுகளுக்கு செயல்வடிவம் கொடுக்கும் வகையில், தற்போது கோட்டபாய அரசினால் நிறுவப்பட்ட அரசியல் நிர்ணய சபையின் முன்னால் சுமந்திரன் வகையாறாக்களே, முன்னெடுத்து வைக்கலாம். எது எப்படியானாலும், கோட்டா காலத்திய சபையின் செயல்பாடுகள் துவங்கவே இல்லை என்பதே உண்மை.

அவ்வாறு செய்வதற்கு, அரசு மற்றும் அரசியல் ரீதியாகப் பிரச்சினைகள் தோன்றும் என்று தமிழர் தரப்பு கருதுமேயானால், அப்பொழுது எடுத்த முடிவுகளுக்கு செயல் வடிவம் கொடுக்கும் வண்ணம் நாடாளுமன்றத்தில் தனியார் பிரேரணையாக அதனை முன் வைக்கலாம். அந்தப் பிரேரணையை இந்த ஏழு கட்சிகளின் அனைத்து நாடாளுமன்ற உறுப்பினர்களும் சேர்ந்து முன்னெடுக்க வேண்டும்.

(10ஆம் பக்கம் பார்க்க)

உ
முருகன் துணை.

நல்லூர் சைவத் தமிழ்ப் பண்பாட்டுக் கலைக் கூடல்

# செவ்வழி நயனம்

நல்லூர் பெருந்திருவிழாக் காலத்தை முன்னிட்டு நல்லூர் சைவத்தமிழ் பண்பாட்டுக் கலைக்கூடல் பாடசாலை மாணவர்களிடையே நடத்திய கட்டுரை போட்டியில் முதல் நிலை பெற்ற மூன்று ஆக்கங்கள் இங்கே இவ்வாறம் பிரசுரமாகின்றன.

## கல்வி அழகே அழகு



நாம் வாழுகின்ற வேகமான உலகிலேயே நாம் முன்றேற்றகரமான வாழ்வினை வாழ்வதற்கு ஏழை முதல் பணக்காரர் வரை அனைவருமே கல்வியைப் பெற முயற்சிக்கின்றார்கள். ஆனால் அக்கல்வி அனைவரிடமும் முழுமையாக அமைவதில்லை. ஆனாலும் பலர் இச்செல்வத்தைப் பெற பல வழிகளில் முயற்சிக்கிறார்கள். ஏன் அவ்வாறு முயற்சிக்க வேண்டும் என்றால் பயபலம் படைத்தவர்களைவிட கல்வியறிவு படைத்தவர்களையே இவ்வுலகம் போற்றும். கற்றவர்கள் வாழ்கின்ற போதும், வாழ்ந்த பின்பும் அவர்களின் புகழை உலகம் எப்போதும் போற்றும். அதனாலேதான் எம்முன்னோர்கள் 'அரசனுக்கு தன் ஊரில் மட்டும்தான் சிறப்பு; கற்றவர்களுக்கு சென்ற இடமெல்லாம் மதிப்பு' என அழகாக எடுத்துக் கூறியுள்ளனர்.

மனிதன் தமக்கிடையே தகவல்களைப் பரிமாறத் தொடங்கிய காலத்திலிருந்து இன்றுவரை மனிதனின் இளமைப் பருவத்திலிருந்து முதுமைப்பருவம் வரை கல்வியானது தொடர்ந்து வருகின்ற முடிவில்லாப் பாதை போன்றது. இவ்வாறான பாதையில் நாம் எவ்வளவு தூரம் செல்கிறோம் என்பதிலிருந்தே எமது கல்வி வளம் பெறுகின்றது. இவ்வாறான கல்வியை நாம் எப்போது வேண்டுமானாலும் பெற்றுவிட முடியும் என்று எண்ண முடியாது. நாம் கற்கின்ற கல்வி நாம் வாழ்கின்ற வாழ்நாள் முழுவதும் நிலைக்க வேண்டுமென்றால் இளமைப் பருவத்திலிருந்தே அச்செல்வத்தை சேமிக்க வேண்டும். 'நாம் பிறக்கும்போது எதனையும் எடுத்துவரவில்லை, செல்லும்போது எவற்றை எடுத்துச் செல்ல முடியாது' என்பது பகவத் கீதையினுடைய செய்யுளாகும். ஆனாலும் பணம், பொருள் போன்ற செல்வங்கள் எப்போதும் எமது வாழ்க்கையில் வரப்போவதில்லை. ஆனால் கல்வியானது நாம் செல்கின்ற வழி முழுவதும் எம்மை வழிநடத்திச் செல்கின்ற சிறந்த கருவாக எப்போதும் வரும் என்பதில் எவ்வித அச்சமும் இல்லை.


இனியவை நாற்பது, விவேகசிந்தாமணி, முதுமொழிவெண்பா போன்ற செய்யுள்கள் பல நீதிக் கருத்துக்களை எடுத்துச் சொன்னாலும் தலையாக கல்வியின் சிறப்பையும், கற்றவர்களின் சிறப்பையும், கற்றதனால் ஒருவன் அடைகின்ற உயர்ந்த நிலையையும் அழகாக இலக்கிய மொழிநடையில் பல கவிஞர்களாலும், புலவர்களாலும் பாடப்பட்டுள்ளது. அவ்வாறாக பல வித்துவான்களால் உயிரினும் மேலாக எடுத்துக் கூறுவதற்கு என்ன காரணம்? ஏனென்றால் பணம் பொருளினால் முன்னேறியவர்களும் உள்ளனர், தாழ்ந்தவர்களும் உள்ளனர். ஆனால் கல்வியினால் முன்னேற்றமடைந்தவர்களை மாத்திரமே நாம் காணமுடியும். கல்விகற்று வீழ்ச்சியடைந்து போனவர்கள் என இப்பிரபஞ்சத்திலேயே யாரும் இல்லை.

ஓர் சிறந்த கல்வியானது சிறந்த சமுதாயத்தை உருவாக்குவதற்கு மிகப்பெரிய கருவியாகவுள்ளது. திருவள்ளுவர் முதல் ஔவையார் வரை அதாவது ஒவ்வோர் நூற்றாண்டில் வாழ்ந்த ஔவையார் வரை கல்வி பற்றி ஒரு அதிகாரமோ, ஒரு குறட்பாவோ பாடியுள்ளமை குறிப்பிடத்தக்கது. இவ்வாறு இவர்களைப் பற்றி உலகம் இன்றும் பேசுவதற்கான காரணம் அவர்கள் பெற்றுள்ள அழகான கல்வியே.

கல்வி என்பதில் பாடங்களைக் கற்பது மட்டுமல்ல பழக்கவழக்கங்களைக் கற்பதே மிக முக்கியமான படியாகும். ஏனென்றால் கல்வியை மட்டும் கற்பதனால் கல்வி முழுமையடையப் போவதுமில்லை, அவ்வாறான கல்வியினால் எவ்வித பயனுமில்லை. அதனால்தான் சிறுபராயத்திலே அவ்வாறான கல்வியைக் கற்றப் பாடசாலைக்குச் செல்கின்றோம். பாடசாலையில் தொடங்கப்பட்ட எமது கல்வியானது முடிவெல்லை இல்லாதபோது, எமது வாழ்வின் இறுதிவரை ஏதோ வொன்றைக் கற்றுக் கொண்டேயிருக்கின்றோம். எமது வாழ்க்கை அழகாக மாறுவதற்கு கல்வியே மாபெரும் உதவியாக இருக்கிறது. ஆகவே கல்வியினால் எமது உலகம் அழகாகின்றது. அதனால்தான் 'கல்வியழகே அழகு'.

**- மகேந்திரராஜா வானதி -**
**(யாழ். இந்து மகளிர் கல்லூரி)**

## நான் விரும்பும் பெரியார்



மீன்பாடும் தேன் நாடான மட்டக்களப்பு மாநகரில் காரைதீவில் செந்தமிழ் புலவர் சுவாமி விபுலானந்தர். ஆயிரத்து எண்ணூற்று தொண்ணூற்று இரண்டாம் ஆண்டு பங்குனி மாதம் இருபத்தேழாம் நாள் கண்ணம்மைக்கும் சாமிதம்பிக்கும் ஒரே புதல்வனாக அவதரித்தார். இவரது பிள்ளை திருநாமம் மயில்வாகனன் ஆவார்.

இவர் சிறு வயதிலே செந்தேன் தமிழிலும் சைவ சமயத்திலும் சிறந்து விளங்கினார். தமிழ் வித்தகராகிய இவர் தமிழ், வடமொழி, ஆங்கிலம் போன்ற மொழிகளிலும் வித்தகராக திகழ்ந்தார். நான் விரும்பும் பெரியார்களில் முதன்மையானவரான சுவாமி விபுலானந்தர் தனது பதினேழாவது வயதில் மட்டக்களப்பு மிக்கேல் கல்லூரியில் ஆசிரியராக பணிபுரிந்தார்.

மயில்வாகனன் கொழும்பு ஆசிரியர் பயிற்சி நிலையத்தில் ஆசிரியருக்கான உயர் கல்வியைத் தொடர்ந்து ஆசிரியர் ஆனார். சுவாமி விபுலானந்தர் ஈழத்திருநாட்டின் கிழக்கில் உள்ள மட்டக்களப்பிலிருந்து தெய்வீக மண்ணில் நல்லைக் கந்தன் வாழும் யாழ் நகரை வந்தடைந்தார். அங்கு மானிப்பாய் இந்துக்கல்லூரியில் ஆசிரியராகப் பணிபுரிந்த சுவாமி விபுலானந்தர் நல்லாசிரியராகவும் பாடசாலை முதல்வராகவும் கடமை புரிந்தார். மயில்வாகனர் முதல்வராக பணிபுரிந்த காலத்தில் மானிப்பாய் இந்துக் கல்லூரி பல வளர்ச்சிகளைக் கண்டது.

தமிழ் வித்தகரான சுவாமி விபுலானந்தர் துறவியாக எண்ணி அறிஞர்கள் பலர் வாழும் இந்திய திரு நாட்டிற்கு சென்றார். மயில்வாகனர் மதுரை மாநகரை அடைந்தார். அங்கு இராமகிருஷ்ணர மடத்தை அடைந்தார். அங்கு அவர் சைவ சமயத்தைப் பற்றியும் அற்பு தங்கள் பற்றியும் பல விடயங்களை அறிந்தார். அதனால் அவருக்கு பல பட்டங்கள் கிடைத்தன.

சுவாமி விபுலானந்தரைப் பற்றி நாம் பல விடயங்களை கூறலாம். தான் கற்றவற்றையும் தன் வாழ்க்கையில் கற்றுக்கொண்ட விடயங்களையும் அற்புதக்கருத்துக்களையும் தொகுத்து யாழ் நூல் எனும் அற்புத படைப்பை நமக்காக தந்துள்ளார். விபுலானந்த சுவாமி அவர்கள் நமக்கு பல விடயங்களை யாழ்நூல் மூலம் விளக்கியுள்ளார்.

எனக்கு எப்போதும் பிடித்த ஒரே பெரியார் சுவாமி விபுலானந்தராவார்.

**பிரேமகுமார் தருஜா**
**(யாழ் .இந்து மகளிர் கல்லூரி)**

## வாசிப்பதால் மனிதன் பூரணமடைகின்றான்



கூரிய வாளாலும் சிறந்த புத்தகத்தாலும் உலகை ஆளலாம் என நமது முன்னோர்கள் கூறியுள்ளார்கள். ஆனால் இன்றைய காலகட்டத்தில் பொறுத்தமட்டில் சிறந்த புத்தகத்தால் தான் உலகை ஆளமுடியும். இதற்கு வாசிப்பு பழக்கம் இன்றியமையாததாக உள்ளது. 'வாசிப்பதன்மூலம் மனிதன் பூரணம் அடைகின்றான்' என பிரன்சிஸ் பேர்கன் கூறியுள்ளார். நாம் வாசிப்பதன்மூலம் பல்வேறுபட்ட விடயங்களை அடைந்து கொள்ள முடியும்.

பண்டைய காலத்தில் எழுத்துக்கள் உருவாகி, பின்னர் வார்த்தைகளாக மாறி, மொழியாக வந்துள்ளது. குழந்தையாக இருக்கும் போது அவ் எழுத்துக்களை அடிப்படையில் இருந்து பழகி பின் எழுத்துக்கூட்டி வாசிக்கும் பழக்கத்தை ஏற்படுத்தியுள்ளோம். நாம் சிறு வயதில் இருந்து முதியோராகும் வரை பல வகைப்பட்டனவை வாசித்துக் கொண்டிருப்போம். இன்றைய காலகட்டத்தை பொருத்த வகையில் மாணவர்கள் புத்தகத்தைப்படித்து மட்டும் ஒரு சிறிய வட்டத்தில் இருந்து விடக்கூடாது. புல வகைப்பட்ட நூல்களைப் படித்துக் கொள்ளவேண்டும்.

வாசிப்பு என்பது ஏதற்காக என்ற கேள்விக்கணைகள் எழலாம். தவறில்லை. நாம் வாசிப்பது அறிவுக்காகவா? இல்லை. நாம் வாசிப்பது வாழ்வதற்காக. இதற்கு சிறந்த உதாரணம் ஜவகர்லால் நேரு. தனது மகள் இந்திரா பிரியதர்னிக்கு எழுதிய கடிதத்தில் வாழ்வதற்காக வாசி எனத் வாசிப்பதற்கு தனது மகளை ஊக்கப்படுத்தியுள்ளார். மற்றும் நாம் வாசித்தலைக் கட்டாயப் படுத்த கூடாது எனவும் குறிப்பிட்டுள்ளார். ஆம் அதாவது நாம் நமக்கு விருப்பமான நூல்களை வாசிக்கலாம் உதாரணமாக நாவல்கள், சிறுகதைகள், கட்டுரைகள், செய்தித்தாள் போன்றவற்றைக்குறிப்பிட முடியும்.

நமக்கு பல்வேறுபட்ட இலட்சியங்கள், ஆசைகள் காணப்படுகின்றன அவற்றில் சிறந்ததை கண்டுபிடித்து முன்னோக்கி பயணிக்க வாசித்தல் முக்கிய பங்கு வகிக்கின்றது. நீங்கள் நீரை நிலத்தில் ஊற்றுங்கள். அது பரந்து சகல இடங்களும் செல்லும். ஆனால் அதை வாய்க் காலில் ஊற்றுங்கள் அது நூறுமடங்கு வேகத்துடன் தனது இலக்கை நோக்கி சீறி பாய்ந்து செல்லும். அதைப்போல தான் புத்தகங்கள் எமது இலக்கை அடையும் பாதையையும் தன்னம்பிக்கையையும் தருகின்றது.

(13ஆம் பக்கம் பார்க்க)

# அத்தியாவசியமான 383 மருந்துகளில் 92 மருந்துகளுக்கு தட்டுப்பாடுள்ளது!

## ஒப்புக்கொண்டார் சுகாதார அமைச்சர் கெஹலிய



அத்தியாவசியமான 383 மருந்துகளில் 92 மருந்துகளுக்குத் தட்டுப்பாடு இருப்பதாக ஒப்புக்கொண்ட சுகாதார அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல்ல, 14 அத்தியாவசிய மருந்துகள் கையிருப்பில் உள்ளன எனவும் தெரிவித்தார்.

எவ்வாறாயினும் இந்த 14 முக்கிய மருந்துகள் மருத்துவ வழங்கல் பிரிவில் கையிருப்பில் இல்லை என்றும் அவை சுற்றளவில் கிடைக்கின்றன என்றும் அவர் தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில், நாடாளுமன்ற உறுப்பினர் டீ.வீரசிங்க எழுப்பிய கேள்விக்கு பதிலளித்த அமைச்சர், அத்தியாவசிய மருந்துகளின் தட்டுப்பாடு கட்டுப்பாட்டை மீறவில்லை என்றும் அத்தகைய மருந்துகளுக்கு மாற்று மருந்துகள் இருக்கின்றன எனவும் தெரிவித்தார்.

மருந்துப் பற்றாக்குறையை விரைவில் தீர்க்க முடியும் என்றும் மூன்று முதல் ஆறு மாதங்களுக்கு மருந்து இருப்பு வைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாகவும் அவர் கூறினார்.

# தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலையின் வைத்திய அத்தியட்சகருக்குப் பிரியாவிடை!





தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலையில் வைத்திய அத்தியட்சகராகப் பணியாற்றிய வைத்தியர் திலீபனுக்கு வைத்தியசாலை நோயாளர் நலன்புரிச் சங்கத்தின் ஏற்பாட்டில் பிரியாவிடை வைபவம் கடந்த செவ் வாய்க்கிழமை வைத்தியசாலையில் நடைபெற்றது.

பதில் வைத்திய அத்தியட்சகர், சத்திரசிகிச்சை நிபுணர் வைத்திய கலாநிதி சிவமயூரன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில், வைத்திய நிபுணர்கள், வைத்தியர்கள், தாதிய உத்தியோகத்தர்கள், நோயாளர் நலன்புரிச் சங்க உறுப்பினர்கள், அலுவலக உத்தியோகத்தர்கள், வைத்தியசாலைப் பணியாளர்கள் எனப் பலர் பங்குகொண்டு வாழ்த்துரைகளை வழங்கி வைத்திய அத்தியட்சகரைக் கௌரவித்தனர்

நிர்வாகத் துறையில் வைத்திய நிபுணர் கற்கையை மேற்கொண்டுவரும் வைத்தியர் திலீபன், தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலையிலிருந்து இடமாற்றலாகி மன்னார் மாவட்டப் பொது வைத்தியசாலைக்குச் செல்கின்றார். கொரோனா காலப்பகுதியில் தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலையில் கொவிட் சிகிச்சைப் பிரிவை உருவாக்கி சிறப்பான வைத்தியப் பணியை இவர் மேற்கொண்டார் என்பது குறிப்பிடத்தக்கது.

# வீரமும் ........

(08ஆம் பக்கத் தொடர்ச்சி)

நாடாளுமன்றத்தை பொறுத்த வரையில், ஜனாதிபதி ரணில் தமிழர்களை ஏமாற்றுகிறார் என்று கூறும் எதிர்கட்சி தலைவர் சஜித் பிரேமதாஸா, இந்தப் பிரேரணைக்கு ஆதரவு கொடுக்கிறாரா என்பதனையும் இதன் மூலம் தெரிந்து கொள்ளலாம். அப்போதுதான். யாரை நம்பித் தமிழர்கள் அரசியல் செய்யலாம் என்பது முற்றிலுமாக தெளிவாகும். அந்த வகையில், ராஜபக்ஷக்களின் ஆதரவை பெற்றுத்தருவது, ரணிலின் கடப்பாடு, அல்லது தலையெழுத்து.

### இழுத்த இழுப்பு

ஏதோ இவர்கள் இழுத்த இழுப்பிற்கு எல்லாம், மேற்குலக நாடுகள் நடனமாடும் என்ற தமிழர் தரப்பின் ஆர்வத்திற்கும் அகம்பாவத்திற்கும் மீண்டும் சரியான சம்மட்டி அடி கிடைத்துள்ளது. ஜெனிவாவில் அவர்களது தீர்மான நகல் தமிழர்களின் சமகால எதிர்பார்ப்புகளை வைத்துப் பார்க்கும் போது, பல்லில்லாத பாம்பு. என்ன, தாங்கள் மீண்டும் ஏமாற்றப்பட்டோம் என்று உண்மையை சொல்லிகொள்வது அவர்களுக்கு அசிங்கம்.

எனவேதான், சுமந்திரனை தொடர்ந்து, தற்போது மாவை சேனாதிராஜாவும், ஏன், சுரேஷ் பிறேமச்சந்திரனும் மறந்து போன இந்தியாவை துதிபாடத் துவங்கி உள்ளனர். அதில் தவறு எதுவும் இல்லைதான். அதாவது, பதிமூன்று என்றால் பதிமூன்று, அதற்கு அப்பாலும் என்றால், அதுவே என்பதை ஒரு சித்தாந்தமாகவே இந்த ஏழு கட்சிகளும் பார்த்து முன்னெடுக்க வேண்டும்.

அதில் முன்பு ரணில் தலைமை வாக்குறுதி அளித்த வடக்கு – கிழக்கு இணைப்பு தற்போது கிடைக்காமல் போகலாம். காரணம், கிழக்கே உள்ள தமிழ் பேசும் முஸ்லிம் இனத்தவர்களும் அவர்களுடைய அரசியலும் தமிழர்களை போலவே ஆமை வாழ்வு வாழ துவங்கி விட்டார்கள். கடந்த 2019 ஆம் ஆண்டு நடந்தேறிய ஈஸ்டர் தின தீவிரவாத தாக்குதல்களை தொடர்ந்து, முஸ்லிம் மக்களும், அரசுக்கு எதிரான தங்களது சமூக, அரசியல் மற்றும் தனி நபர் பாதுகாப்பு குறித்து கவலை அடைந்துள்ளார்கள். அதற்காக ஒன்றாகவும் செயல்பட துவங்கி உள்ளார்கள்.

என்றாலும், வடக்கு – கிழக்கு இணைப்பு தவிர்த்த இனப்பிரச்சினைக்கான தீர்வுத் திட்டத்தை முஸ்லிம் மக்களும் அவர்களது தலைமைகளும் ஆதரிக்கும் என்று எதிர்பார்க்கலாம். அதற்கு அப்பால் சென்று, பதிமூன்றோ, அதற்கும் அப்பாலான தீர்வோ, அது. அறகலயா காலத்திற்கு பின்னர் நாட்டின் அனைத்து தரப்பு மக்களுக்கும், அவர்கள் சார்ந்த அனைத்து மகாண சபைகளுக்கும் தேவையான விடயம் என்பதனை நாடாளுமன்றத்தின் உள்ளேயும் வெளியேயும் தமிழர் தரப்பு அழுத்திப் புரிய வைக்க வேண்டும்.

அவ்வாறான முயற்சிக்கு, சஜித் ஆதரவு தருகிறாரா என்பதனையும் தமிழர் தரப்பு கண்டறிய வேண்டும். பெரிதோ, சிறிதோ, அவர் தலைமை தாங்கும் மக்கள் சக்தி, ஜே.வி.பி. ஆகிய கட்சிகள் மற்றும் பீரிஸ், விமல் வீரவன்ஸ அணிகள் தமிழர்களின் முயற்சிகளுக்குத் தங்களது பகுதிகளில் ஆதரவு திரட்டினால், அது தமிழர் பணியை இலகுவாக்கும். விடயம் தென்னிலங்கை மக்களையும் சென்றடையும்.

ஆனால், அதற்கு, இந்தியாவின் பெயரையும், பதிமூன்று பற்றிய தீர்வு திட்டம் குறித்தும் பேச வேண்டாம் என்று கூட சில தரப்பினருக்கு தோன்றலாம். அது நியாயமானதே. மாடு வடக்கு பக்கம் போனால் என்ன, தெற்கு பக்கம் போனால் என்ன, சேர வேண்டிய இடத்திற்கு போய் சேர்ந்து விட்டால், இந்தியா என்ன, வேண்டாம் என்றா சொல்லப் போகிறது?

# 20 ஆயிரம் தேசிய மாணவர் படையணியின் பதவியுயர்வு!





இருபதாவது தேசிய மாணவர் படையணியின் பதவியுயர்வு நிகழ்வு யாழ்.மாவட்ட செயலக முகாமைத்துவ பயிற்சி நிலைய மண்டபத்தில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் ஐம்பது வருடங்களுக்குப் பின்னர் ஐந்து தமிழ் அதிகாரிகள் மேஜர் நிலை பதவி உயர்வை பெற்றுக்கொண்டனர்.

இருபதாவது தேசிய மாணவர் படையின் கட்டளை அதிகாரி லெப்ரினன் கேணல் ரத்னவீர தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் விருந்தினர்களாக தேசிய மாணவர் படையணியின் மாகாணப் பணிப்பாளர் கேணல் எம்.எம்.யு.முணசிங்கவும் தியாகி அறக்கொடை நிலையத்தின் ஸ்தாபகர் வா.தியாகேந்திரனும் கலந்து சிறப்பித்தனர்.

# மன்னாரில் நடந்த தொழிற் சந்தை!

மனித வலு மற்றும் வேலைவாய்ப்பு திணைக்களத்தால் மன்னார் மாவட்டத்தில் நேற்று (புதன்கிழமை) காலை தொழிற் சந்தை நடத்தப்பட்டது.

மன்னார் நகர மண்டபத்தில் ஆரம்பமான இந்த நிகழ்வில், பல தொழில் வழங்கும் நிறுவனங்களும் பங்குபற்றியிருந்தன.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக மன்னார் மாவட்ட அரச அதிபர் ஏ.ஸ்ரான்லி டிமெல் கலந்து கொண்டார்.

மேலும், பிரதேச செயலாளர், திணைக்கள தலைவர்கள், தொழில் வழங்கும் நிறுவனங்களின் பிரதிநிதிகள் மற்றும் வேலை வாய்ப்புக்காகக் காத்திருந்த பல நூற்றுக்கணக்கான இளைஞர், யுவதிகள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

இதன் போது வருகை தந்த தொழில் வழங்கும் நிறுவனத்தின் பிரதிநிதிகள் தமது நிறுவனங்கள் ஊடாக எவ்வாறு தொழிலை பெற்றுக்கொள்ள முடியும் மற்றும் அதற்கு மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் தொடர்பாக விளக்கமளித்தனர்.

# முதல் ஆறு மாதங்களில் அரச வருவாய் அதிகரிப்பு

கடந்த ஆண்டின் (2021) முதல் ஆறு மாதங்களுடன் ஒப்பிடுகையில் இந்த ஆண்டின் (2022) முதல் ஆறு மாதங்களில் அரசாங்க வருவாய் 28.54 சதவீதம் அதிகரித்துள்ளது.

இலங்கை மத்திய வங்கியின் சமீபத்திய அறிக்கையின்படி, 2021 முதல் ஆறு மாதங்களில் 715.3 பில்லியன் அரசாங்க வருவாய் இந்த ஆண்டின் முதல் ஆறு மாதங்களில் (2022) 919.5 பில்லியனாக அதிகரித்துள்ளது.

இந்த காலகட்டத்தில் அரசின் வரி வருவாய் 641.2 பில்லியன் ரூபாயில் இருந்து 798.8 பில்லியன் ரூபாவாகவும், வரி அல்லாத வருவாய் 73.3 பில்லியன் ரூபாவில் இருந்து 119.7 பில்லியன் ரூபாவாகவும் அதிகரித்துள்ளது.

எவ்வாறாயினும், அரசாங்க வருமானம் அதிகரித்தாலும், இந்தக் காலகட்டத்தில் அரசின் செலவு 1,495.5 பில்லியன் ரூபாவில் இருந்து 1,822.1 பில்லியன் ரூபாவாக அதிகரித்துள்ளது.

காலைக்கதிர்
Kalaikkathir

இக்கட்டுரையாளர் செல்லத்துரை ரவீந்திரன் சிரேஷ்ட சட்டத்தரணி. ஆஸ்திரேலியாவைத் தளமாகக் கொண்டு இயங்கும் இலங்கைப் புலம்பெயர் சட்டவாளர். இலங்கையில் சன்சோனிக் கமிஷன் விசாரணைகளில் தமிழர் தரப்பில் பிரதான பங்காற்றிய சட்டத்தரணி. தமிழ் புனர்வாழ்வுக் கழகத்தின் பிதாமகர்களுள் ஒருவர். தமிழரின் உரிமைப் போராட்டத்துடன் நெருக்கமாகச் செயற்பட்ட – செயற்படுகின்ற – புலமையாளர். 'காலைக்கதிர்' வாசகர்களுக்கு நன்கு அறியப்பட்ட கட்டுரையாளர். அரசையும் ஜனாதிபதியையும் பதவியை விட்டுப் போகும்படி வலியுறுத்தி தற்போது நடக்கும் போராட்டங்களை தமிழரின் உரிமைப் போராட்ட அனுபவங்களோடு இத்தொடரில் ஒப்பிட்டுப் பார்க்கின்றார் அவர்.



- செல்லத்துரை ரவீந்திரன் -

அங்கம் - 129

# யாழ்ப்பாணம் தொடக்கம் காலிமுகத்திடல் வரை...!

## நாட்டிலும், நாடு கடந்தும் தமிழீழ அரசுகள்




சிங்களப் பேரினவாதம் இரும்பைப் போல் உருக்கி வார்க்க வேண்டியதே ஒழிய, வளையாது என்பது தெரிந்து, 'ஒரு நாடு; ஒரு தேசம்' என்றில்லாது உருக்கி 'பல இனம்; இரு பிரதேசம்' எனும் வடிவமைப்புக்கு ஒப்பந்தம் மூலமும் பிற வழிகளிலும் மாற்ற முயன்ற போது, உருக்கியதும் ஆறிப்போன நிலைக்கு வந்து, ஏற்



படுத்தப்பட்ட தீர்மானத்தால் இரும்பைத் திரும்ப இன்னும் ஒரு வடிவத்துக்காக உருக்கலாம் எனக் காலம் கருதி கருணாநிதி போன்றோர் அங்கலாய்த்தனர். கலைக்கப்பட்ட மாகாண சபையின் தேர்தலில் வெற்றியீட்டி, ஏகோபித்த ஆதரவை நிலை நிறுத்துவதிலேயே – அதனை யதார்த்தமான நிலையாக மாற்றுவதிலேயே – விடுதலைப் புலிகள் முயற்சித்தார்கள்.

கடைசியில் ஒரு பக்கமுமே முன்னேறாமல் சிங்கள பேரினவாதம் இருவரையுமே பதம் பார்த்தது.

'காலத்தே தூற்றிக்கொள்' என்ற பழமொழியை அவர்கள் அறிந்திருந்தும், கிடைத்த அந்த விதையை பாதுகாத்திருந்தால், அதனை யாவருமே சேர்ந்து வளர்த்திருந்தால், அது மரமாகி இருக்குமா, அது யதார்த்தமா, இந்தியா ஏற்றிருக்குமா, நடைமுறைப்படுத்தி இருக்குமா என்று கேள்விகள் உண்டு.

இந்தியாவின் வெளிவிவகாரக் கொள்கை அடிப்படையில் இங்கு தனி நாடு அமைவதை இந்தியா ஏற்காமல் விட்டிருக்கலாம். ஆனால் தனது பிராந்திய நலன்களுக்காக, அதனை மீறிக் கெம்பி இருந்த ஸ்ரீலங்காவைக் கட்டுக்குள் வைத்திருக்க வேண்டிய தேவைகள் அதற்கு இருந்தன.

வாதங்கள் எதுவானாலும், 1983 கலவரத்தின் பின் அமிரலிங்கத்துக்கும், ஏனைய கூட்டணியினருக்கும் தமிழ் நாட்டில் அடைக்கலம் தந்த இந்தியாவின் ஈடுபாடுகள், பின்னர் வரதராஜப்பெருமாளுக்கும், அவரது தோழர்களுக்கும், இந்தியாவுக்காகப் போராடியவர்களுக்கும் அரசியல் அடைக்கலம் தந்து ஆதரித்தமை, வடிவமைப்புக்கு அவர்கள் தமிழீழத்தைப் பிரகடனப்படுத்தியவர்கள் என்ற ஸ்ரீலங்காவின் கோபாவேங்களால் நிலைமைகள் சாதகமாக மாறி இருக்கலாம்.

எதுவானாலும், அவர்களுக்குத் தரப்பட்ட அடைக்கலங்களால் அந்தப் பிரகடனத்தின் ஆணிவேர் அங்குதான் வேரூன்றியது.

சந்திரிகா ஜனாதிபதியானதும் இந்தியா வரதராஜப்பெருமாள் அவரது விருப்பத்தில் (இலங்கை) திரும்புகிறார் என்றாலும் அவரது பாதுகாப்புகள் கருதி செய்து கொள்ளப்பட்ட உடன்படிக்கையில்தான் அவர் திரும்புவதற்கு அனுமதிக்கப்பட்டார். அத்தோடு அந்தத் தீர்மானமும் – பிரகடனத்தின் அடிப்படையும் – கைவிட்டு போயிற்று.

இந்தச் சிந்தனையின் பிரதிபலிப்புகள், விடுதலைப் புலிகளிடையே, நோர்வே சமாதானப் பேச்சுக் காலங்களில் அவர்களுக்கு ஓரளவு ஆதரவாக இருந்த சர்வதேச பார்வைகளால் எழுந்தது. அமெரிக்கா, இந்தியா போன்ற பல நாடுகள் விடுதலை புலிகளைப் பயங்கரவாதப் பட்டியலில் சேர்த்திருந்தாலும், ஐரோப்பிய ஒன்றிய நாடுகள் பல அப்படி இருக்கவில்லை. சமரசத் தீர்வு ஒன்றை எதிர்பார்த்திருந்தனர். சமாதான பேச்சுவார்த்தைகளில் சமஷ்டி அமைப்பு வடிவில் ஒரு தீர்வை நோக்கிப் போகலாம் என்ற ஒப்புதல் இரு பகுதியினராலும் ஏற்றுக்கொள்ளப்பட்டது.

ஆயின், அதுவும் மஹிந்த ராஜபக்ஷ ஜனாதிபதியாகப் பதவியேற்றதும், ஆட்டம் கண்டு, கடைசியில் விடுதலைப்புலிகளின் தலைவர்களின் அழிப்பில் முடிந்தது.

இந்திய ஒப்பந்தத்தை இன்னும் அதனை நடைமுறைப்படுத்தக் கோருவது போல், நோர்வே சமாதானப் பேச்சுக்களில் ஏற்றுக் கொள்ளப்பட்ட சமஷ்டி அடிப்படையை நடைமுறைப்படுத்தக் கோரி, நோர்வே மற்றைய சர்வதேச நாடுகளுக்கு அழுத்தந்தராமல் இருப்பதற்கு முக்கிய தடை, அதில் (அந்தத் தீர்மானத்தில்) தமிழ் மக்களது ஏகோபித்த தலைவர்களாகக் கையொப்பமிட்ட விடுதலைப் புலிகள் இயக்கம் இன்று இல்லாமையும், அது சர்வதேசத்தால் பயங்கரவாத அமைப்பாகவும் பட்டியலிடப்பட்டதும்தான்.

விடுதலைப் போரின் கடைசி கட்டங்களில் இந்தச் சிந்தனை நாடு கடந்த தமிழீழ அரசாக உருவாகியது.

தமிழர்கள் புலம்பெயர்ந்துள்ள நாடுகளில் இது அந்தந்த நாடுகளில் அரசாக இயங்கினாலும், ஜனநாயகமும் பேச்சு சுதந்திரமும் அந்த நாடுகளில் இருப்பதால் இயங்குவதற்கு அனுமதிகள் இருந்தாலும், அது அரசாக அங்கீகாரம் பெற்றது அல்ல.

யதார்த்தமாக இந்த அங்கீகாரத்தின் மூல வேர் இந்தியாவிடம் இருந்து, பிராந்தியத்தின் காவலனாக வருதல் வேண்டும்.

இந்த நாடுகடந்த தமிழீழ அரசின் பின்னணிகளில் அதனைச் சாத்தியமாக்க எடுக்கப்படும் நடவடிக்கைகளை, தமிழ்





மக்களுக்கு அந்த அரசே தெளிவாக்க வேண்டும். அப்படி இல்லை எனில், அதுவும் வரதராஜப்பெருமாள் செய்தது போல ஒரு கருத்தாக்கமாகவே அடங்கி விடும்.

அதேசமயம் இந்தியா உட்பட சர்வதேச நாடுகள் தமிழீழம் என்ற கோரிக்கையையோ அல்லது விடுதலைப் புலிகளையோ ஏற்றுக்கொண்டனவாக இல்லை.

மஹிந்தவின் காலங்கள் போய், பின் கோட்டாபய பதவி ஏற்று, அவரும் பதவியை விட்டு விலகி, அதற்குக் காரணியாக இருந்த காலிமுகத்திடல் போராட்டம் சொல்லும் செய்தி இன, மத வேறுபாடுகளின்றி, மக்கள் எல்லோரும் சமமாக நடத்தப்பட வேண்டும் என்பதே.

இவற்றைத் தாங்கள் நடத்திய அரசியலை ஒட்டி தமிழ் மக்கள் தங்களையே விமர்சிக்கும் மனோபாவங்களோடும் உணர்வுகளோடும் மீளப் பார்த்துக் கொள்ள வேண்டியவர்களாகிறார்கள்.

(வளரும்....)

# 75வது சுதந்திர தினத்தில் விசேட புத்தக கண்காட்சி





இலங்கையில் இருந்து வெளிநாடுகளுக்கு கொண்டு செல்லப்பட்டுள்ள அரிய மற்றும் வரலாற்று மதிப்புமிக்க புத்தகங்கள் மற்றும் ஆவணங்கள் உள்ளடங்கிய விசேட புத்தகக் கண்காட்சியொன்றை இலங்கையின் 75 ஆவது சுதந்திர தினத்தை முன்னிட்டு நடத்த ஏற்பாடு செய்திருப்பதாக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

ஜனாதிபதி நேற்று (லியாழக்கிழமை) முற்பகல் பண்டாரநாயக்க சர்வதேச ஞாபகார்த்த மாநாட்டு மண்டப வளாகத்தில் நடைபெற்று வரும் 23 ஆவது கொழும்பு சர்வதேச புத்தகக் கண்காட்சியை பார்வையிடுவதற்காகச் சென்றிருந்தார். இதன்போதே ஜனாதிபதி மேற்கண்டவாறு தெரிவித்தார்.

சுதந்திர தினத்தை முன்னிட்டு நடத்தப்படவுள்ள புத்தகக் கண்காட்சிக்கு இலங்கை புத்தக வெளியீட்டாளர்கள் சங்கத்தின் ஒத்துழைப்பை பெற எதிர்பார்ப்பதாகவும் ஜனாதிபதி தெரிவித்தார்.

நேற்று காலை கண்காட்சி வளாகத்துக்கு வருகை தந்த ஜனாதிபதியை, இலங்கை புத்தக வெளியீட்டாளர்கள் சங்கத்தின் தலைவர் சமந்த இந்தீவர உள்ளிட்டோர் வரவேற்றனர்.

இலங்கை மன்றக் கல்லூயின் தலைவர் சமன் அதாவுதஹெட்டி, புத்தக வெளியீட்டாளர்கள் சங்க உறுப்பினர்களான விஜித யாப்பா, எச்.டி. பிரேமசிறி, ஆரியதாச வீரமன், அதுல ஜெயக்கொடி ஆகியோரும் இந்நிகழ்வில் கலந்து கொண்டனர்.

இந்த வருட புத்தகக் கண்காட்சியில் 400 இற்கும் மேற்பட்ட உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு புத்தக வெளியீட்டாளர்களின் விற்பனைக் கூடங்கள் இடம்பெற்றுள்ளன.

ஜனாதிபதி அவற்றை நேரில் சென்று பார்வையிட்டதுடன் புத்தக வெளியீட்டாளர்கள் மற்றும் எழுத்தாளர்களுடனும் சிறிது நேரம் உரையாடினார். கண்காட்சி வளாகத்திற்கு வருகை தந்திருந்த பொது மக்களுடன், ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க சிநேகபூர்வ உரையாடலிலும் ஈடுபட்டார்.

# வாசிப்பதால் மனிதன் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

எவன் ஒருவன் பல நூல்களை தேடி தேடி வாசிக்கின்றானோ அவனே அனைத்து துறைகளிலும் முன் மாதிரியாக திகழ்வான். அமெரிக்காவின் முன்னாள் ஜனாதிபதியான ஆபிரகாம் லிங்கன் பல மைல்கள் நடந்து சென்று நூலை இரவல் பெற்று வாசித்ததினால் தான் அவர் பிற்காலத்தில் சிறந்த தலைவராக வந்தார்.

நாம் வரலாற்றை பின்னால் புரட்டிப் பார்த்தால் புரியும் நமது கவனத்தை ஈர்த்த பலரும் புத்தகவாசிப்பை வலியுறுத்தி இருப்பார்கள்.

அறிஞர் அண்ணா தனது புத்தக வாசிப்புக்காக அறுவை சிகிச்சையை தள்ளிப்போட்டவர். மகாத்மாகாந்தியிடம் ஒருவர் கேட்டார் உங்களிடம் நூறுகோடி பணம் இருந்தால் என்ன செவ்வீர்கள்? என்றார் இதற்கு மகாத்மாகாந்தி நூலகம் அமைப்பேன் என கூறினார்.

முன்னர் அறிஞர்கள் புத்தகத்தை தேடி தேடி வாசித்தார்கள். இதனால் அவர்களால் பல நூல்களை ஒன்றிணைத்த நூலகத்தை கட்டினார்கள். தற்போது நூலகத்தில் நூல்களை எவரும் தீண்டுவாரற்று கிடக்கின்றன.

ஜுலியஸ்சீசர் கூறுகிறார் 'ஆயிரம் புத்தகங்களை வாசித்த ஒருவனை காட்டு. அவன்தான் எனது வழிகாட்ட என்று .

கல்லினை உளி செதுக்குவது போல புத்தக வாசிப்பு எம்மை பூரணமான மனிதன் ஆக்கின்றது. 'பாடை ஏறினும் ஏடது கைவிடேல்' என்று எமது முன்னோர்கள் கூறுகின்றார்கள். அதாவது இறக்கும் வரை புத்தகங்களை வாசிக்க வேண்டும் என்கிறார்கள்.

சாக்கிரடீஸ்க்கு நஞ்சு கொடுக்கும் வரை அவர் புத்தகத்தை வாசித்துக் கொண்டிருந்தார் இது யாருக்கு தெரியும்?

விபுலானந்தார், ஆபிரகாம்லிங்கன், அப்துல்கலாம், பிளோட்டே, மாட்டின்லூதர், சார்லிசப்லின், மகாத்மாகதந்தி இவர்கள் அனைவரும் வாசித்தலை சுவைத்தார்கள். ரசித்தார்கள். உண்டார்கள். சொல்லப்போனால் பாரதிதாசன் கூறுவது போல 'தனித்தனமந்த வீட்டில் புத்தகமும் நானும் சையோக புரிந்த தொரு வேளைதன்னில் இயற்கை எழில் எல்லாம் கண்டேன். மனம் முகர்ந்தேன். சுவைகள் உண்டேன் மிக்குயர்ந்த கவிஞர் நெஞ்சில் மகாசோதியில் கலந்து எனது நெஞ்சம்'

கம்பனின் செய்யுளோ, பாரதியின் பாடல்களோ, ஏன் கண்ணதாசனின் வரிகளோ அவற்றை வாசித்தால் நமது வாழ்க்கையையே மாற்றிவிடும். எமது காலம் மிகவும் குறுகியது. அவற்றுள் நாம் சகல அனுபவங்களை பெற்றுக் கொள்ள முடியும்.. ஆனால் புத்தகங்களை வாசிப்பதன் மூலம் அனுபவங்கள், இன்பதுன்பங்கள், வறுமை அனைத்தையும் கண்முன் பார்த்து வாழ்க்கைக்கு தயார் நிலையில் இருக்கின்றோம்.

'தொட்டனைத்தூறும் மணற்கெணி மாந்தர்க்கு கற்றனைத் தூறும் ஆறிவு' என்கின்றார் வள்ளுவர் அதாவது எவ்வளவு ஆளமாக மண்ணை தோண்டுகிறமோ அவ்வளவு நீர் வரும். அதை போல எவ்வளவு வாசிக்கின்றமோ அவ்வளத்திற்கு அறிவு பெருகும்.

இன்றைய காலக்கட்டத்தில் வாசிப்பு என்பது அரிகி சென்றுவிட்டது. பெற்றோர்களும் மாணவர்களை வாசிப்பதற்கு ஊக்கப்படுத்துவது இல்லை. மற்றும் அரசாங்கம் பல நடவடிக்கைகளை கட்டாயப்படுத்த வேண்டும். பாடசாலை மாணவர்களுக்கு இரு பாடவேளையாவது நூலகத்திற்காக ஒதுக்க வேண்டும். வாசிப்பதன் மூலம் நமது ஞாபக சக்தி அதிகரிக்கின்றது. நாம் கேட்டதையும், பார்த்ததையும் விட வாசித்தலே நீண்ட காலம் மனதில் இருக்கும். ஆகவே வாசித்தலை சுவாசிப்போம்.

**- முத்துக்குமார் பிரியங்கா -**
**(யாழ். இந்து மகளிர் கல்லூரி)**

# மட்டக்களப்பு விவசாய அமைப்புக்கள் ஜனாதிபதி செயலகத்தில் சந்திப்புகள்!

## சாணக்கியன் எம்.பியின் ஏற்பாட்டில்



மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள அனைத்து விவசாய அமைப்புகளின் பிரதிநிதிகளுக்கும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் இரா.சாணக்கியனுக்கும் இடையில் கலந்துரையாடல் ஒன்று இடம்பெற்றுள்ளது.

கொழும்பில் நேற்று (வியாழக்கிழமை) காலை இந்த கலந்துரையாடல் இடம்பெற்றுள்ளது. இது தொடர்பில் அவர் கருத்து தெரிவிக்கையில் –

உரப்பற்றாக்குறை காரணமாக நெற்பயிர்ச்செய்கையில் ஈடுபடும் விவசாயிகள் பெரும் அசௌகரியங்களுக்கு முகங்கொடுத்துள்ளனர்.

அத்துடன், நெற்செய்கைக்கு தேவையான உரத்தை அரசாங்கம் வழங்கும் வரையில், நெற்செய்கையில் ஈடுபடப் போவதில்லை.

குறிப்பாக விவசாய அமைச்சர் தங்களிடம் தெரிவித்த கருத்துக்களில் தங்களுக்கு நம்பிக்கையில்லை

மழையை நம்பி ஒரு லட்சத்து 20 ஆயிரம் ஏக்கரிலும், 80 ஆயிரம் ஏக்கர் நீர்பாசனங்களையும் நம்பி தாங்கள் விவசாயத்தில் ஈடுபடுகின்றனர் எனவும் மட்டக்களப்புமாவட்டத்திலுள்ள அனைத்து விவசாய அமைப்புகளின் பிரதிநிதிகள் பங்குபற்றினர்.

நேற்று காலை இடம்பெற்ற விசேட கலந்துரையாடலின் போது இரா.சாணக்கியனின் பிறந்தநாளை முன்னிட்டு மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள அனைத்து விவசாய அமைப்புகளின் பிரதிநிதிகள் கேக் ஒன்றையும் வெட்டியிருந்தனர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

இதேவேளை, நேற்று நண்பகல் ஜனாதிபதி செயலகத்தில் நடைபெற்ற கலந்துரையாடலிலும், மாலை எதிர்கட்சி தலைவர் காரியாலயத்தில் நடைபெற்ற கலந்துரையாடலிலும் மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள அனைத்து விவசாய அமைப்புகளின் பிரதிநிதிகள் பங்கேற்றனர்.

# கரித்தாஸ் கியூடெக் நிறுவனத்தினரால் நஞ்சற்ற உணவு பாதுகாப்பு செயலமர்வு



கரித்தாஸ் கியூடெக் நிறுவனத்தால் நடைமுறைப்படுத்தப்படும் நஞ்சற்ற உணவு பாதுகாப்பு செயற்திட்டத்தின் கீழ் நல்லூர், சண்டிலிப்பாய், கோப்பாய், தெல்லிப்பழை மற்றும் ஊர்காவற்துறை பிரதேசங்களைச் சேர்ந்த கிராம மட்டத் தலைவர்களுக்கும் பயனாளிகளுக்குமான கருத்தமர்வு நிறுவனத்தின் இயக்குநர் அருட்பணி ச.யூஜின் பிரான்ஸிஸ் தலைமையில் கடந்த வியாழக்கிழமை யாழ்ப்பாண பொதுசன நூலக மண்டபத்தில் நடைபெற்றது.

'பிரச்சாரப்படுத்தலும் குரல்கொடுத்தலும்' என்ற தலைப்பில் நடத்தப்பட்ட கருத்தமர்விற்கு வளவாளராக உமாநாத், (தேசிய ஒருமைப்பாட்டு உத்தியோகத்தர், மாவட்ட மொழி மற்றும் நல்லிணக்க கற்கைகளின் இணைப்பாளர்) அவர்களும் 'நிதி முகாமைத்துவம், வியாபார பொறிமுறைகள் மற்றும் பிரதேச மட்ட ஒன்றியத் தலைவர்களை உருவாக்கல்' தொடர்பான கருத்தமர்விற்கு நெறியாளராக நீலாம்பரன் (மாவட்ட இணைப்பாளர், திறன்விருத்தி பிரிவு) அவர்கள் கலந்து கொண்டதுடன் 45 வீட்டுத்தோட்ட பயனாளிகளும் நிறுவன செயற்திட்ட உத்தியோகத்தர்களும் கலந்துகொண்டனர்.

இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 23.09.2022இல் வெளியிடப்பெற்றது.